
# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 6 செய்தி 07 டிசம்பர் 2020 விலை ரூ 10/-



# போராடும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக மின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்













# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

விலை ரூ. 10/-
டிசம்பர்


உள்ளே....


- ★ விவசாயிகள் போராட்டம் வெல்லட்டும்
- ★ வரலாறு படைத்த நவம்பர் 26 வேலை நிறுத்தம்
- ★ வேளாண் சட்டங்களையும் மின்சார சட்டதிருத்த மசோதா 2020 கைவிடவும்
- ★ சங்கம் அமைக்கும் உரிமைக்கு எதிராக நீதிபதிகள் கருத்து...
- ★ நிவர் புயலும் தப்பித்த மின்வாரியமும்
- ★ வாரியத் தலைவருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தை
- ★ வெண்மணி தீ
- ★ இந்தியாவை இருளில் தள்ளும் ஆட்சியாளர்கள்



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**



முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம்
சென்னை 600 005.


# விவசாயிகளின் போராட்டம் வெல்லட்டும்! புத்தாண்டு புதியதாக பிறக்கட்டும்!!

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

- என்றார் வள்ளுவர்

அதாவது உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலைப் பின்பற்றியே நிற்கும். அதனால் எவ்வளவு துன்பமானாலும் உழவே சிறந்த தொழிலாகும். அது தான் அதன் பொருள்.

இந்தியாவின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயத்தை கார்ப்பரேட்டுகளின் கைகளில் ஒப்படைக்க முடிவெடுத்து விவசாயிகளுக்கெதிரான வேளாண் சட்டங்களை இந்த கொரானா நோய் தொற்று காலத்தில் கொள்ளைப்புற வழியாக நிறைவேற்றியது மோடி அரசு.

இந்தியாவின் சுதந்திர போராட்டம் போல இன்றைக்கு தேசம் முழுவதும் பத்தி எரிகின்ற வகையில் போராட்டம் நடந்து வருகிறது.

ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், தங்கள் பரம்பரை நிலத்தை காப்பதற்கு கடுங்குளிரை பொருட்படுத்தாமல் தலைநகர் டெல்லியை நோக்கி படை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். போராட்ட களத்தில் உள்ள விவசாயிகள் வேளாண் சட்டங்களை திரும்பப் பெறுவதோடு, மின் சட்டதிருத்த மசோதாவையும் திரும்பப்பெற வலியுறுத்தி வருவது நம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது. மின்சார சட்டதிருத்த மசோதாவின் பாதிப்புகளை விவசாயிகள் உணர்ந்துள்ளனர்.

மோடி அரசாங்கம் ஒரு நாடு, ஒரு தேர்தல் என்ற முழக்கத்தை மீண்டும் கூற ஆரம்பித்து விட்டது. அனைத்து பொதுத்துறைகளையும் கார்ப்பரேட்டுகளுக்கும், இந்திய பெருமுதலாளிகளுக்கும் தாரை வார்க்க ஆர்வமாக உள்ளனர். இந்த தேசத்தின் கோவில்கள் என்று வர்ணிக்கப்பட்ட பொதுத்துறைகளை மதவெறி பிடித்த இந்த கோரக்கும்பல் இடித்து தள்ளுகின்ற வகையில் செயல்பட்டு வருகிறார்கள். மோடி அரசின் இந்த ஆறு ஆண்டுகளில் இந்தியா எந்தவிதத்திலும் முன்னேற முடியாமல் இந்திய பொருளாதாரம் முட்டுச் சந்தில் நிற்கிறது.

வரலாறு படைத்த நவம்பர் 26 வேலை நிறுத்தம் தொழிலாளர்களிடையே எழுச்சியை உருவாக்கி பொதுத்துறைகளை தாரைவார்க்க அனுமதிக்க மாட்டோம் என்று மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. மத்திய அரசு இவைகளை எல்லாம் கணக்கில் கொண்டு செயல்பட வேண்டும் என்பதே சரியாக இருக்கும்.

மின்துறையில் மாற்றங்களை கொண்டு வர வேண்டுமென்று மாநில மின்சார வாரியங்களை துண்டாக்க நினைக்கின்றது. இந்திய மின்சார துறையில் தனியார ஈடுபடுத்தியதின் விளைவு இன்றைக்கு மொத்த உற்பத்தியில் 52சதம் தனியாரிடத்தில் சென்று விட்டது என்பது கவலை அளிக்கிறது. நீண்டகால ஒப்பந்தத்தின் மூலம் அதிக விலைக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்வதன் மூலம் மாநில மின்வாரியங்கள் நிதிச்சுமையால் சீரழிந்து தள்ளாடி வருகிறது.

தமிழக மின்சார வாரியமும், நிதி நெருக்கடியில் சிக்கி இந்த பட்டியலில் இடம் பெற்று விட்டது. தமிழக மின்வாரியத்தின் கடன் சுமையை காரணம் காட்டி மின்வாரியத்தின் பல்லாயிரக்கணக்கான காலிப்பணி இடங்களையும் நிரப்பாமல் மக்கள் சேவையை விரைவாக செய்ய முடியாமல் உள்ள நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

மத்திய மாநில அரசுகளின் இந்த நடவடிக்கைகளுக்கெதிராக இந்திய நாட்டின் விவசாயிகளும்– மின் நுகர்வோர்களும் – மின் ஊழியர்களும் இணைந்து களம் காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதை நாம் உணர வேண்டும்.

தமிழக அரசின் மின்சார சட்டத்திருத்த மசோதா மீது இரட்டை வேடம் போடும் நிலையை அம்பலப்படுத்த வேண்டும். நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் இந்த மசோதா கொண்டுவந்து நிறைவேற்றுவதற்காக புறச்சூழலை உருவாக்க மத்திய மின்துறை அமைச்சர் மாநிலங்களை சம்மதிக்க வைக்க சுற்றுப்பயணம் செய்து வருகிறார். இந்த மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய முற்பட்டால் இணைந்து நிற்போம் போராட்டகளம் காண்போம்..

பிறக்கின்ற ஆண்டு உழைப்பாளிகளுக்கும்
விவசாயிகளுக்கும் விடியலை தரும் ஆண்டாகவும்
வர்க்க ஒற்றுமையை உயர்த்தி பிடிக்கும் ஆண்டாகவும் பிறக்கட்டும்...
புத்தாண்டே வருக ! புதுப்பொழிவு தருக!






மத்திய பி.ஜே.பி. அரசின் மக்கள் விரோத தொழிலாளிகள் விரோத, விவசாயிகள் விரோத கொள்கைகளை கண்டித்தும் விவசாயிகளுக்கு விரோதமான சட்டங்களை கைவிடக்கோரியும், தொழிலாளர் நலச்சட்டங்களை திருத்தியதை ரத்து செய்திட கோரியும், முறைசாரா தொழிலாளர் களுக்கு இந்த கொரானா தொற்று நோய் காலத்தில் வேலை இழந்த காரணத்தால் அவர்களுக்கு மாதம் ரூ.7500/- வழங்கிடக்கோரியும், பொதுத்துறைகளை பாதுகாக்கப்பட வேண்டும், தனியாருக்கு விற்கக்கூடாது என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்திய நாட்டின் உழைப்பாளி மக்கள் விவசாயிகள் பங்கு பெற்ற இந்த வேலை நிறுத்தம், மறியல் பேரணி, ஆர்ப்பாட்டம் உள்ளிட்டவைகளில் 25 கோடி பேர் கலந்து கொண்ட நிகழ்வாக நடந்து வரலாறு படைத்தது.


இந்த வேலை நிறுத்த காலத்தில் கடுமையான புயல் தமிழகத்தை தாக்கும் என கருதியதால் 16 மாவட்டங்களுக்கு அரசே விடுப்பு அளித்த காரணத்தாலும், நிவாரண பணிகளுக்கு வெளிமாவட்டங்களிலிருந்து மின்வாரிய ஊழியர்கள் பணிக்கு சென்ற காரணத்தாலும் தமிழக மின்வாரியத்தில் வேலை நிறுத்தம் நடைபெறவில்லை. ஆனால் மறியல், ஆர்ப்பாட்டம் உள்ளிட்டவைகளில் நம்முடைய தோழர்கள் பெருவாரியாக கலந்து கொண்டு இந்த இயக்கத்தை வெற்றியடையச் செய்தனர்.

பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் கடுமையான ஒடுக்கு முறையையும் மிரட்டல்களையும், கைது நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு உழைக்கும் வர்க்கம் எந்தவித மிரட்டலுக்கும் அடி பணியாமல் இந்தமகத்தான வேலை நிறுத்தத்தை வெற்றியடையச் செய்திருக்கிறார்கள்.

பொதுத்துறை நிறுவனங்களில் வேலை நிறுத்தம் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் வலுவாக அமைந்திருந்தது. நிலக்கரி, மின்சாரம், போக்குவரத்து, கட்டுமானம், அங்கன்வாடி, BHEL, HAL, சேலம் பொக்காரோ உருக்காலை மற்றும் மருந்து விற்பனை பிரதிநிதிகள் மதிய உணவு திட்ட ஊழியர்கள் இவர்களோடு முறைசாரா தொழிலாளர்களும் இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிபெறச் செய்துள்ளனர்.

பல மாநிலங்களில் பந்த் போன்ற நிலை உருவானது. மக்களை, தொழிலாளர்களை, விவசாயிகளை பாதிக்கின்ற எந்த பிரச்சனையாக இருந்தாலும் வர்க்க ஒற்றுமையை உயர்த்தி பிடித்து மத்திய அரசிற்கு எச்சரிக்கை மணி அடித்து விட்டார்கள் இந்திய உழைப்பாளிகள்.

தேசத்தில் இவ்வளவு விரிவான அளவில் உழைக்கும் மக்களும், விவசாயிகளும், விவசாய கூலித்தொழிலாளர்களும், முறைசாராத் தொழிலாளர்களும் மத்திய பி.ஜே.பி. அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கெதிராக கிளர்ந்தெழுந்துள்ள நிலையில் மத்திய அரசு தன்னுடைய பொறுப்பை உணர்ந்து மக்களின் வாழ்வாதாரங்களை அழித்து சொல்லொன்னா துன்பத்திற்கு ஆளாக்கியுள்ள இந்த கொள்கைகளை திரும்பப்பெற வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.



# வேளாண் சட்டங்களையும், மின்சார சட்டத்திருத்த மசோதா 2020-ஐ கைவிடக்கோரியும் டெல்லியை உலுக்கிய விவசாயிகளின் போராட்டம்

மத்திய அரசு நிறைவேற்றிய புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக கடந்த நவம்பர் 26 முதல் நாடு முழுவதும் விவசாயிகள் போராடி வருகின்றனர். பஞ்சாபில் இருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் தலைநகர் டெல்லியை நோக்கி 96,000 டிராக்டர்களும் 12 மில்லியன் விவசாயிகளும் பேரணியாக சென்று கொண்டிருந்தனர். உலக வரலாற்றில் மிக நீண்ட பேரணி இதுவாகத்தான் இருக்கும் சுமார் 80 கி.மீட்டருக்கு மேலாக பேரணி நீண்டு செல்வது என்பது ஒரு மிகப்பெரிய எழுச்சியை காண முடிந்தது.

விவசாயத்தை பாதிக்கும் வேளாண் சட்டங்களை மத்திய அரசு திரும்பப் பெறுவதோடு விவசாய அமைப்புளை அழைத்து பேசி தீர்வு காண்பதற்கு பதிலாக அவர்கள் மீது உ.பி.போன்ற மாநில அரசுகள் கடுமையான காட்டு மிராண்டிதனமான தாக்குதல்களை தொடுத் துள்ளன.

விவசாயிகள் வெறுமென தலைநகரில் தங்கி இருப்பதாக வரவில்லை மாறாக கோரிக்கைகளை வென்றெடுத்து விட்டுத்தான் திரும்புவார்கள் என விவசாய சங்க தலைவர்கள் தெரிவித்தனர். இந்த பிரதான பிரச்சனையை மோடி அரசாங்கம் ஒதுக்கி தள்ளிவிட முடியாது.

வேளாண் சட்டங்களும், மின்சார சட்டதிருத்த மசோதா 2020-ஐ திரும்பப் பெறும் வரை விவசாயிகள் ஓயமாட்டோம் என்று போர் பிரகடனம் செய்து வருகின்றனர். இந்திய அரசு இந்த சட்டங்கள் விவசாயிகளுக்கு உதவக்கூடியது என்று கூறி வரும் வேளையில் நாடு முழுவதும் இவற்றிற்கு எதிராக விவசாயிகள் திரண்டு வருவது அதிகரித்து வருகிறது.

இந்த சட்டங்கள் அனைத்தும் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதை கைவிட்டு விட்டதையும் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிப்பதையும் கைவிட்டதோடு இந்த சட்டங்கள் விவசாயிகளை முழுமையாக கார்ப்பரேட் கம்பெனிகளின் ஒப்பந்தங்களுக்குள் தள்ளி விட்டுள்ளன. விவசாயிகள் தங்கள் நிலத்தின் மீது இருந்த உரிமையை பறிக்க விடமாட்டோம் என போராடி வருகின்றன.

ஒப்பந்த வேளாண்மையின் அனுபவம் மிகவும் பேரழிவினை தந்திருக்கிறது என்பதே கடந்த காலங்களின் வரலாறு. அடிமைப்பட்டிருந்த பிரிட்டிஸ் ஆட்சியில் அனுபவித்த துன்பங்கள் இந்த தலைமுறையும் அதற்குள் தள்ளப்படும் ஆபத்தும் உள்ளது என்பதை விவசாயிகள் புரிந்துள்ளனர்.

தங்கள் நிலங்களை அடிமாட்டு விலைக்கு விற்றுவிட்டு அவர்களை அப்புறப்படுத்திவிடும் இந்த சட்டங்களை அப்புறப்படுத்துவதே எங்களின் நோக்கம் என விவசாயிகள் போராடி வருகிறார்கள்.

புதிய வேளாண் சட்டங்கள் பொது விநியோக முறையை ஒழித்துக் கட்டிவிடும் உணவு உற்பத்தி செலவினங்கள் உயர்ந்து விடும். கருப்புச்சந்தை கொடி கட்டிப்பறக்கும். இவற்றிக்கு மேலாக உணவு பாதுகாப்பு அரித்து வீழ்த்தப்படும்.

இந்திய நாட்டின் முதுகெலும்பான விவசாயத்தை பாதுகாக்க போராடிவரும் விவசாய சங்கங்களின் தலைவர்களை சந்தித்து பேசுவதற்கு பதிலாக கடும் அடக்கு முறைகளை கையாளும் போக்கை மத்திய அரசு கைவிட வேண்டும்.

விவசாயிகளின் குரலை கேட்பதற்கு அரசு தயாராக இருக்க வேண்டும். இந்திய வேளாண்மையையும், விவசாயத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசினுடைய கடமை என்தை மத்திய பி.ஜே.பி அரசு உணர வேண்டும்.

மின்சார வாரிய ஊழியர்களும், நமது விவசாயிகளின் நலனை பாதுகாக்கவும், மின்சார சட்டதிருத்த மசோதாவை கைவிடவும் விவசாயிகள் - மின் தொழிலாளர்கள் ஒற்றுமையை பலப் படுத்தவும் ஆதரவு இயக்கங்களை தொடர்ந்து நடத்திட வேண்டும் என்ற வேண்டு கோளையடுத்து, தமிழகம் முழுவதும் நமது தோழர்கள் சுயேட்சையாகவும் தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு சார்பாகவும் கண்டன முழுக்கங்களையும் ஆர்ப்பாட்ட இயக்கங்களையும் நடத்தி வருகிறார்கள்.

சட்டங்களை திரும்ப பெறுவது தான் மத்திய அரசுக்கு ஒரே வழி என தெரிவித்தார்கள் நமது விவசாயிகள். மத்திய அரசு இவர்களை




கெஞ்சி கூத்தாடி பேச்சுவார்த்தைக்கு அழைத்த நேரத்தில் மதிய உணவு வழங்கிய பொழுது, தாங்கள் கொண்டு வந்த உணவை தரையில் அமர்ந்து சாப்பிட்டு மோடி அரசின் விருந்தையே புறக்கணித்தனர் நமது விவசாயிகள். ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்ல பெண்கள் என சீக்கிய பெண்களும் இதில் பங்கேற்று போராடி வருகிறார்கள்.

இதுவரை இந்த போராட்டத்தில் 3 தோழர்கள் தங்களை இன்னுயிரை மாய்த்துள்ளனர். இந்திய தேசத்தின் கலாச்சாரத்தை, பண்பாட்டை, விவசாயத்தை காக்கும் தேசப்பக்த போராட்டத்தில் நாமும் இணைந்து நிற்போம்.

**விவசாயி - மின் தொழிலாளர்
ஒற்றுமை ஓங்கட்டும்!**



மத்திய அமைப்பின் மத்திய சென்னை கிளையில் 12.11.2020 அன்று 50 ஆம் ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி நடைபெற்றது. கிளைத் தலைவர் எம். தயாளன், என். சீனிவாசன் செயலாளர் எஸ். கண்ணன் மற்றும் திட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் கொடியேற்றி சிறப்புரை ஆற்றினார்.





# சங்கம் அமைக்கும் உரிமைக்கு எதிராகவே நீதிபதிகள் கருத்து தெரிவிப்பது ஏற்கத்தக்கதல்ல, வருந்தத்தக்கது

அ.சவுந்தரராசன்
மாநில தலைவர்/ CITU

மருத்துவர்கள், மருத்துவப்பணியாளர்கள், காவல் துறையினர், தீயணைப்புத்துறையினர் போன்றோருக்கு சங்கம் தேவையில்லை என்று கூறியுள்ள நீதிபதிகளின் இந்த கருத்து வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மருத்துவர்களின் வேலை நிறுத்தத்தை தடைசெய்யுமாறு யூனுஸ்ராஜா என்பவர் வழக்குதொடுத்தார். இந்த வழக்கின் போக்கில் நீதிபதிகள் என்.கிருப்பாகரன் மற்றும் பி.புகழேந்தி ஆகியோர் மருத்துவர்கள், மருத்துவப்பணியாளர்கள், காவல் துறையினர், தீயணைப்புத்துறையினர் போன்றோருக்கு சங்கம் தேவையில்லை என்று கருத்து கூறியுள்ளனர்.

நீதிபதிகளின் இந்த கருத்து வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது. சங்கம் இருந்தாலே வேலை நிறுத்தம் நடக்கும் என்ற அனுமானத்தில் இருந்து சிலப்பிரிவினருக்கு சங்கமே தேவையில்லை என்ற முடிவு எட்டப்படுகிறது

சங்கம் இருக்கிற துறைகளில் அல்லது ஆலைகளில் நினைத்த போதெல்லாம் பொழுதுபோக்காக யாரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவில்லை. மெய் வருத்தியும், மூளையை கசக்கியும் வேலை செய்வோருக்கு அந்த வேலையின் பலனை அனுபவிக்கும் முதலாளிகள் அல்லது நிர்வாகத்தினர் குறைந்தபட்ச நியாயத்தை செய்ய மறுக்கும்போது, சட்டப்படியாக கூட நடக்காதபோது, இழிவாகவும், மனிதத்தன்மையற்றும் நடத்தும்போது, அற்ப காரணத்திற்கெல்லாம் ஆணவத்தோடு தண்டிக்கும்போதும் வேலை செய்வோருக்கு போராட்டந்தானே ஒரேவழி? வேலையின் பலனை சுரண்டிக் குவித்து ஆனந்தம் கொள்வோருக்கு அந்தப் பலன் நிற்கும்போது மட்டும்தான் வலிக்கிறது,

நவீன தொழில்நிறுவனங்கள் தோன்றிய கடந்த 300 ஆண்டுகளாக நடந்த எண்ணற்ற போராட்டங்களால் பிறந்த உரிமைதான் தொழிற்சங்க உரிமை. தொழிற்சங்க உரிமை யாரும் போட்ட பிச்சையல்ல உற்பத்தி சுமுகமாக நடக்கவே தொழிலாளர்கள் கூட்டாகவும், அமைப்பாகவும், இயங்க அனுமதிக்க வேண்டும் என்று முதலாளிகளும் அரசும் உணர்ந்து ஏற்றுக்கொண்டதன் விளைவுதான் தொழிற்சங்க சட்டமாகும். பழிவாங்கலுக்கு அஞ்சி யாரும் எடுத்த எடுப்பில் சங்கம் அமைப்பதில்லை. இப்போதும் எண்ணற்ற தொழிற்சாலைகளில், நிறுவனங்களில் சங்கம் இல்லை நமது சுதந்திரத்தின் லட்சணம் அப்படி. ஒரு இடத்தில் சங்கம் வருகிறது என்றால் அங்குள்ள சூழ்நிலைக் கொடுமையின் கட்டாயம் அது என்பதை உணரவேண்டும். தொழிலாளர்களோ, மருத்துவர்களோ, காவல்துறையோ யாரானாலும் மனிதனாக மதிக்கப்பட்டால், மனிதத்தன்மையோடு நடத்தப்பட்டால், அவர்கள் தரப்பு நியாயம் ஏற்கப்பட்டால் போராட்டங்கள் வராது. போராட்டங்களும் வேலை நிறுத்தங்களும் நடக்கிறது என்றால் அதனை நடத்துபவர்களை மட்டும் குற்றக் கண்கொண்டு பார்க்காமல் அதன் மறுபக்கத்தையும் அக்கறையோடு கவனிக்கவேண்டும்.

மக்களின் திடீர் போராட்டங்கள் அன்றாடம் வெடிக்கின்றன அங்கெல்லாம் சங்கமே இல்லை எனினும் ஏன் போராட்டங்கள் வெடிக்கின்றன என்று மனம்கொண்டு யோசிக்கவேண்டும். ஐந்து உச்சநீதிமன்ற நீதிபதிகளே தலைமை நீதிபதியின் செயல்பாடுகள் தவறு என்று கூட்டாக தெருவிற்கு வந்து

மக்களுக்கு அறைகூவல் விடுத்ததின் பொருள் என்ன? அந்த போராட்டத்திற்கு அவர்களுக்கு என்ன சங்கமா இருந்தது? ஆனாலும் அவர்கள் அநீதியை எதிர்த்து போராட்டத்தை முன்னெடுத்தார்கள். கோவில் அர்ச்சகர்கள் கூட சங்கம் அமைத்து போராடும் நிலைக்கே தள்ளப்படுகிறார்கள்,

வேலை நிறுத்தங்களுக்கு இப்போதும் சட்டத்தில் வரையறைகள், கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் இருக்கின்றன. வேலை நிறுத்தங்கள் விளையாட்டுமல்ல சட்டப்படி கேள்வி வரைமுறைக்கு அப்பாற்பட்டதுமல்ல. வேலை நிறுத்தம் சட்டப்படி சரியா தவறா என்பதை அரசு தீர்மானிக்கவேண்டும். அரசு அப்படி எடுக்கும் முடிவு குறித்து சட்டப்படி நீதிமன்றம் பரிசீலிக்கலாம் அரசின் வேலையை, தொழிலாளர் துறையின் வேலையை நீதிமன்றம் எடுத்துக்கொள்ளக்கூடாது.

பல வேலை நிறுத்தங்களில் நீதிமன்றங்கள் தலையிடுவது பிரச்சனையை தீவிரப்படுத்தவே செய்கிறது. அரச கட்டளை என்பதைப் போல நீதிமன்ற கட்டளை என்று வேலை நிறுத்தத்தை முடக்குவதால் சரியான நீடித்த தீர்வு கிடைக்காது இதில் சமூக பொறுப்போடும் கரிசனத்தோடும் அரசும் நிறுவனத்தாரும் நடந்தால்தான் இருதரப்பிலும் புரிந்துணர்வும், அமைதியும் ஏற்படும்

எனவே, சங்கம் அமைக்கும் உரிமை எல்லொருக்கும் வேண்டும் அந்தந்த துறையினர் தத்தம் குறைகளை கூட்டாக முறையீடு செய்து தீர்வினை எட்டும் உரிமை உறுதிப்படவேண்டும். நீதிபதிகள் சங்கம் அமைக்கும் உரிமைக்கு எதிராகவே கருத்து தெரிவிப்பது ஏற்கத்தக்கதல்ல, வருந்தத்தக்கது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது




# கார்ப்பரேட்டுகளுக்கு கடன் வழங்கி திவாலாகும் லட்சுமி விலாஸ் வங்கி!

கரூரை தலைமையிடமாக கொண்டு 527 கிளைகளுடன் செயல்பட்டு வரும் லட்சுமி விலாஸ் வங்கி கடந்த மூன்று ஆண்டுகளாக கடும் நெருக்கடியியில் சிக்கி வருகிறது. வாரக்கடன்களில் சிக்கி தவித்தது லட்சமி விலாஸ் வங்கி. எனவே வர்த்தக தடை விதித்தது மத்திய நிதி அமைச்சகம்.

ரேன் பாக்ஸி என்ற நிறுவனத்திற்கு மட்டுமே 720 கோடி கடன் கொடுத்துள்ளது. கடந்த 2020 செப்டம்பர் 30 அன்று அதன் நஷ்ட கணக்கு 357 கோடியாக காட்டப்பட்டது. தற்போது டிசம்பர் 16 வரை வர்த்தக தடை காரணமாக வாடிக்கையாளர்கள் ரூ.25,000த்திற்கும் மேல் பணம் எடுக்க முடியாது. மருத்துவம், படிப்பு உள்ளிட்டவைகளுக்கு உரிய ஆவணங்களை காட்டினால் உயர் அதிகாரிகள் அனுமதியுடன் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லஷ்மி விலாஸ் வங்கியை இதர பெரிய வங்கிகள் இணைக்கும் முயற்சியும் தோல்வியடைந்துள்ளது. இந்த சிறு வங்கியே கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 16,000 கோடி கடன் கொடுத்து வசூல் செய்ய முடியாமல் திவாலாகி வருகிறது. அது போலத்தானே பெரிய வங்கிகளின் நிலைமையும் எதிர்காலத்தில் இருக்கும்.

விவசாயிகளிடமும், தொழிலாளிகளிடமும் கறாராக வசூல் செய்யும் வங்கிகள், கார்ப்பரேட் முதலாளிகளின் வீட்டு வாசலுக்கு சென்று பொது மக்களின் பணத்தை கொடுத்து வராக்கடனாக மாற்றி வங்கியை திவாலாக்கும் வங்கி அதிகாரிகள் அவர்களுக்கு உடந்தையாக இருந்த ஆட்சியாளர்கள் ஆகியோரின் சொத்துக்களை பறிக்கலாமே?

என்ன செய்வது பெருமுதலாளிகளுக்கு கடன் கொடுத்து அவர்களை வெளிநாட்டிற்கு தப்பிக்க விடும் ஆட்சியாளர்கள் உள்ள வரை பொதுத்துறை வங்கிகளை சூறையாட அனுமதிக்கும் வங்கி அதிகாரிகள் உள்ளவரை இது தொடரும்.

மக்களின் பணத்தை சூறையாட அனுமதிக்கிறாமோ? பொதுத்துறை வங்கிகளை பாதுகாக்க வேண்டிய கடமை தொழிலாளர்களுக்கு உண்டு.



# பாட்டாளிகளின் படைக்கு முன்னால் ஆட்சியாளர்கள் காணாமல் போவது நிச்சயம்

மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது உழைப்பு. அந்த உழைப்பின் மூலமே சமூகம் வேகமான வளர்ச்சியை நிலை கண்டுள்ளது. மனித உழைப்பின் ஒரு முக்கிய பகுதியாக மூலை உழைப்பின் பங்கு மனித சமூகத்தின் விஞ்ஞான வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். காலம்தோறும் உழைப்பு மிகப்பெரிய பங்காற்றினாலும் உழைப்பு செலுத்தும் தொழிலாளிகள் பல நூற்றாண்டுகளாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். பண்டமாற்று முறை இருந்த வரை மக்களின் உழைப்பு சக்திக்கு மதிப்பும் மரியாதையும் இருந்தது. பண்டமாற்று முறைக்கு பதிலாக எப்போது பணம் அறிமுகப்படுத்தப்பட்டதோ அன்றே உழைப்பு சுரண்டல் துவங்கியது. உழைப்பு சுரண்டல் துவங்கிய போதுதான் தொழிலாளி மற்றும் முதலாளி வர்க்கங்கள் துவங்கியது. அதன் நீட்சி பலநூறு ஆண்டுகளாக இன்றுவரை தொடர்கிறது.

தொழிலாளிகள், உழைப்பாளிகள் பல ஆயிரம் ஆண்டுகளாக ஏமாற்றப்பட்டு வந்தாலும் குறிப்பிட்ட சில காலங்களில் தொழிலாளிகளின் எழுச்சியால் அவ்வப்போது மன்னர்களுக்கு எதிரான புரட்சிகள் வெடித்தது. உலகின் முதல் புரட்சி பிரான்ஸ் நாட்டில் 18-ம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அதற்கு வித்திட்டவர்கள் வால்டேயர், ரூசோ போன்ற பல தத்துவ ஞானிகள். உழைக்கின்ற மக்களின் உண்மையான மதிப்பை அவர்களுக்கு அளிக்காமல் தொடர்ந்து ஏமாற்றப்படும் போது மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றார்கள். உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படும் போது மக்கள் போராடுவது தவிர்க்க முடியாதது என்பது இயற்கையின் நியதி. உலகம் முழுவதும் நடந்த போராட்டங்கள் அனைத்தும் அதையே சொல்கிறது. இந்தியாவில் நடந்த சிப்பாய் கலகமும், சுதந்திர போராட்ட வரலாறும் அதையே உணர்த்துகின்றது. இதை உணராத ஆட்சியாளர்கள் வரலாற்று படிப்பினைகளை உணராத ஆட்சியாளர்கள் மீண்டும் மீண்டும் மக்கள் மூலமாக பாடம் கற்கின்றனர்.

இந்தியாவிற்கு பிறகு சுதந்திரம் பெற்ற எண்ணற்ற நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேறி விட்டது. இந்தியா மட்டும் இன்றும் முன்னேறும் பட்டியலில் உள்ளது. மோடி தலைமையில் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு இந்தியா பொருளாதாரத்தில் பின்னோக்கி சென்று கொண்டுள்ளது. மக்களின் வாங்கும் சக்தி குறைந்து வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து வருகின்றது. மீண்டும் மக்கள், தொழிலாளர்கள் பெரிய அளவில் வீதிக்கு வந்து போராட துவங்கி விட்டனர். தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்படுவதால் வேலையின் நிரந்தர தன்மை கேள்விக்குறியாகியுள்ளது. NEEM, Fixed Term Employment, என்ற திருத்தங்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக தொழிலாளிகளுக்கு எதிராக கொண்டு வரப்பட்டதை எதிர்த்து 26.11.2020 அன்று அகில இந்திய வேலை நிறுத்தம் நடைபெற உள்ளது. தொழிலாளிகளுக்கான உரிமைகள் நசுக்கப்படும் போது, மக்களுக்கான உரிமைகள் பறிக்கப்படும் போது போராட்டங்கள் தீவிரமகின்றது. போராட்டங்களை மறக்கடிக்க ஊடகங்களை பயன்படுத்துகின்றது. மதக்கலவரங்களை நடத்த முயல்கின்றது. வேல் யாத்திரைகளை நடத்துகின்றது பாஜக.

முதலாளித்துவத்தின் அடுத்த பரிணாமம் கார்ப்பரேட் முதலாளித்துவம். கார்ப்பரேட்டுகளை முன்னிருத்திய பொருளாதார சீர்திருத்தங்களை மத்திய மோடி அரசு வைக்கின்றது அதனால் தான் அனைத்து பொதுத்துறைகளையும் தனியாருக்கு விட வேண்டும் என்று துடிக்கிறது மோடி அரசு, தனித்தனியாக போராடிய சங்கங்கள், தனித்தனியாக போராடினால் சாதிக்க முடியாது என்று ஓரணியில் இணைந்து நின்று போராட இசைவு தெரிவித்துள்ளது. நல்ல மாற்றம், வரவேற்க கூடியமாற்றம். நவம்பர் 26 வேலை நிறுத்தம் மோடி அரசை அசைத்துப்பார்க்க கூடிய வேலை நிறுத்தமாக மாறவுள்ளது. தொழிலாளி வர்க்கம் இதுவரை கண்டிராத வகையில் மிக அதிக அளவில் இதில் கலந்து கொண்டனர்.

பாஜகவின் இந்துத்துவா அரசியல் இனிமேலும் நடக்காது என்பதை தொழிலாளி வர்க்கம் உலகத்திற்கு நிரூபிக்கும் காலம் நெருங்கி விட்டது. அரசியல் மாற்றமோ, ஆட்சி மாற்றமோ எதுவாகிலும் அதை செய்து காட்டுவது தொழிலாளி வர்க்கம். அதிலும் இடது சிந்தனை கொண்ட தொழிலாளி வர்க்கம் ஆட்சியாளர்களை மாற்றும் வல்லமை கொண்டது என்பதை தற்போதைய களம் உணர்த்தும் காலம் இது.

நன்கு வளர்ந்த நாடுகளான பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, கனடா, அமெரிக்காவிலும் கூட அரசு தொழிலாளிகளின் சலுகையில் கையை வைத்தால் அவர்கள் தெருவிற்கு வந்து போராடுவார்கள் என்பதை நிருபித்துள்ளனர். இந்திய தொழிலாளி வர்கமும் இதற்கு விதிவிலக்கல்ல. தொழிலாளிகள் வீதிக்கு இறங்கினால் இயந்திரத்தின் சக்கரங்கள் நிற்கும். அரசு ஸ்தம்பிக்கும் அதன் பின் எல்லாம் மாறும் என்பதை மத்திய அரசுக்கு உணர்த்துவோம்.

ஈடு இணையற்ற மனித உழைப்பின் முன்பாக மதங்களும், ஜாதிகளும், இந்துத்துவ கோட்பாடுகளும் காணாமல் போகும் என்ற வரலாறு மீண்டும் எழுதப்படவிருக்கின்றது.

மீண்டும் ஒரு மாற்றத்தை எழுத தொடர்ந்து போராடுவோம்.. மாற்றமே நிலையானது..

**- தி.ஜெயசங்கர்**





# கால்பந்து வீரர் டிகோ மரடோனா மறைவு

காலால் உலகளந்த பெருமாள் என்ற ஒரு சொலவடை தமிழகத்தில் உண்டு. அதுபோல காலால் உண்மையிலேயே உலகைக் கட்டிப் போட்டவன் டிகோ மாரடோனா என்ற அர்ஜென்டினா நாட்டின் கால்பந்து வீரன்.

மாரடோனாவை கால்பந்தாட்ட வீரர்கள் பீலே என்ற கால்பந்தாட்ட ஜாம்பவான் தொடங்கி அத்தனைபேரும் அதிசய கால் கட்டுவித்தைக் காரன் என்று போற்றினர். அவன் அடித் 34 கோல்களில் பல கோல்கள் மந்திரமா, மாயாஜாலமா என எண்ணும் வண்ணம் அமைந்ததாக கால்பந்து உலகம் இப்போதும் மாய்ந்து மாய்ந்து பேசிக்கொண்டே இருக்கிறது. இந்த வியப்பு காலம் உள்ளவரை தொடரும். ஒப்பாகும் மிக்காடும் அவனுக்கு முன்னும் பின்னும் இல்லை என்ற புகழைக்கூட அவர் பெறலாம்.

இந்த அற்புதமான உலக புகழ் கொண்டவன் சோசலிச புரட்சி நாயகன் பிடல் கேஸ்ட்ரோவின் ரசிகன். புரட்சி மாவீரன் சேகுவோராவின் விசிறி. ஆம்! அவனது கண்டமான தென் அமெரிக்க கண்டத்தின் விடுதலைப் புருஷர்கள் அவர்கள். அவன்ஒரு இடதுசாரி ஆர்வலன். அவன் மந்திரக் காலில் காஸ்ட்ரோவையும் காளையின் திமிர் போன்ற புஜத்தில் சே.சுவேராவையும் பச்சை குத்திக் கொண்டவன்.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பும் மரடோனாவை நூற்றாண்டின் கால்பந்து வீரராக அங்கீகரித்தது. உலகம் முழுவதும் ரசிகர்களை கொண்ட மரடோனா நவம்பர் 25அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தி அனைவரையும் அதிர்ச்சியடைய செய்தது. மறைந்த மாரடோனாவிற்கு செவ்வஞ்சலியை உரித்தாக்குவோம்!



# நிவர் புயலும் தப்பித்த மின்வாரியமும்

தென்மண்டல வானிலை மையம் வங்கக்கடலில் புதிய தாழ்வழுத்த மண்டலம் உருவாகி அது 26-ந்தேதி புயலாக மாறி மரக்காணம் வழியாக கரையை கடக்கும் என அறிவித்திருந்தது. அதற்கு 'நிவர்' புயல் என பெயர் சூட்டி இருந்தனர்.

போதுமான பணியாளர்கள் இல்லாத கடுமையான சூழலில் புயலை எதிர்கொள்ள மின்வாரிய ஊழியர்கள் தயாராக இருக்கிறார்கள் என வெத்துவேட்டு அறிக்கைகளும் தமிழக அரசும் மின்வாரியமும் வெளியிட்டுக் கொண்டே இருந்தது.

இந்திய தேசத்தின் உழைப்பாளி மக்கள் அனைவரும் இந்திய பொதுத்துறை நிறுவனங் களை பாதுகாக்கவும் கொரானா தொற்று காலத்தில் கொள்ளைப்புற வழியாக மத்திய அரசால் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட விவசாயி களுக்கெதிரான வேளாண் சட்டங்களை ரத்து செய்யக் கோரியும் தொழிலாளர் நலன்களுக் கெதிரான தொழிலாளர் சட்டங்களை நிறைவேற்றியதை கைவிடக்கோரியும், நவம்பர் 26-ல் வேலை நிறுத்தம் செய்வதென முடிவு செய்து அதற்கான பணிகளில் ஈடுபட்டிருக்கும் போது தான் இந்த 'நிவர்' புயலின் செய்தியும் நமது பணிகளை முடக்கியது.

'நிவர்' புயலால் மின் விநியோகத்தில் மிகப்பெரிய தடைகள் ஏற்படுமென கருதி கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு போதுமான ஊழியர்களும், தேவையான தளவாட பொருட்களுடன் நவம்பர் 24,25 ஆகிய தினங்களில் கொட்டும் மழையை பொருட் படுத்தாமல் தமிழகத்தின் இதர பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மின்வாரிய ஊழியர்கள் மக்கள் சேவையை தொடர மக்களோடு நெருக்கமாக இருக்க அவர்களுக்கு பணி செய்வதே எங்கள் தலையாய கடமை என பாதிக்கப்பட உள்ள பகுதிகளுக்கு விரைந்து சென்றனர்.

புயலின் தாக்கம் குறைந்து அது வலுவிழந்த காரணத்தால் அரசு எதிர்பார்த்த அளவில் மிகப்பெரிய சேதாரத்தை மின்வாரியத்திற்கு ஏற்படுத்தவில்லை. தற்போ தைய மதிப்பீட்டின்படி சுமார் ரூ.64 கோடி அளவில் சேதாரம் ஏற்பட்டுள்ளதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின்வாரிய பணியாளர்கள் தங்களுக்கு மின்வாரிய நிர்வாகத்தால் ஆயிரம் பிரச்சனைகள் இருந்தாலும், நமது மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற நிலையில் தடையில்லா மின்சாரத்தை வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் தனது கோரிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு பாதிப்பு ஏற்படவுள்ளதாக கூறப்பட்ட இடங்களுக்கு ராணுவத்தை போல விரைந்து சென்ற காட்சிகள் மக்கள் நலனில் எப்பொழுதும் அக்கறை உள்ளவர்கள் மின்வாரிய பணியாளர்களே! என பறைசாற்றியது.

சென்னை வெள்ளம்,தானே, வர்தா, ஒக்கி, கஜா புயல் வரிசையில் 'நிவர்' புயலையும் எதிர்கொள்ள எமது களப்பணியாளர்களும், மின்வாரியத்தின் வளர்ச்சியில் அங்கமாக விளங்கும் எமது ஒப்பந்த தொழிலாளர்களும் அணிவகுத்து சென்ற காட்சி, எத்தனை இடர்பாடுகளையும் கடந்து மக்கள் சேவையை தொடர அரும்பணியாற்ற தயரான காட்சிகளும் இந்த மின்வாரியத்தை பொதுத்துறையாக பாதுகாக்க போராட்டத்தின் ஒரு அங்கமாக இருந்தது.



# ஒன்றுபட்ட போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி

## அனைத்து தொழிற் சங்க தலைவர்களையும் சந்தித்தார் வாரியத் தலைவர்

**கோரிக்கை பட்டியல் அளித்து 03.12.2020 அன்று பேச்சுவார்த்தை நடத்தினர் மத்திய அமைப்பின் நிர்வாகிகள்**

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா

பொருள் : **மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் - தொழிலாளர் பிரச்சனை குறித்து தீர்வு காண்பது - தொடர்பாக**

கீழ் கண்ட கோரிக்கைகள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு எங்களது தொழிற்சங்கங்கத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

1. தொழிற்சங்கங்களை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கியுள்ளமைக்கு எங்களது நன்றியை தெரிவித்து கொள்கிறோம். மேலும் கடந்த காலங்களை போலவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் வாரம் ஒரு முறை தொழிற்சங்கங்களை சந்திப்பதற்கும், கோரிக்கைகளின் மீது தீர்வு கண்டிட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

2. 22.02.2018 அன்று தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு மாறாக தற்பொழுது தனியாரிடம் இயக்கவும் பராமரிக்கவும் ஒப்படைக்க உத்திரவிடப்பட்ட துணை மின் நிலையங்கள், சிறுபுனல் மின் உற்பத்தி நிலையங்கள், உயர் அழுத்த மின்பாதை பராமரிப்பு பணிகள் மற்றும் பண்டகசாலையிலிருந்து தளவாட பொருட்களை பிரிவு அலுவலகத்திற்கு கொடுப்பது சம்மந்தமான உள்ளிட்ட அனைத்து உத்தரவுகளையும் திரும்ப பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். அதே போல பணி ஓய்வு பெற்ற பணியாளர்களை காலிப்பணியிடங்களில் நிரப்பிட உள்ள உத்திரவை ரத்து செய்திட வேண்டும். மேலும் புதியதாக நிர்மானிக்கப்படும் அனல் மின் நிலையங்களில் அனுமதிக்கப்பட்டிருந்த பதவிகளை ரத்து செய்த உத்தரவுகளை திரும்ப பெற வேண்டும்.

3. மின்வாரிய நிர்வாகத்தால் தொழிலாளர் பணி நிலைகளில் மாற்றம் கொண்டுவர வேண்டுமெனில் 1947 தொழிற்தகராறு சட்டம் 9(A) வின் கீழ் அறிவிக்கை கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்பட வேண்டும்.

தொழிற்தாவா எழுப்பக்கூடிய விஷயங்களில் தொழிற்சங்கங்களை அழைத்துப்பேசி தீர்வு காணப்பட வேண்டும்.

4. மின்வாரியத்தின் நிதி நிலைமையை காரணம் காட்டி அவுட்சோர்சிங் முறையை ஊக்கப்படுத்தும் வாரிய நிர்வாகம் நிதிநிலையை சீர்செய்ய தொழிற்சங்கங்களின் அனுபவத்தை பெற்றிட தொழிற்சங்கங்களுடன் உரிய ஆலோசனைப்பெற வேண்டும். தொழிற்சங்கங்கள் பங்கு பெறும் வகையில் ஒரு குழு அமைக்க வேண்டுகிறோம்.

5. தமிழக மின்வாரியத்தில் மறுசீரமைப்பு தொடர்பாக பணியாளர்கள் நலன் சார்ந்த தமிழக அரசின் உத்தரவாதத்தோடு, ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்கள் பாதுகாக்கும் வகையில் தொழிற்சங்கங்களோடு தொடந்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும்.

6. சம்பளம் வழங்கும் சட்டத்தின் அடிப்படையில் தொழிற்சங்க உறுப்பினர்களிடம் சந்தா மற்றும் நன்கொடை அவர்களின் சம்பளத்தில் வாரியம் பிடித்தம் செய்து வழங்கும் 13 ஆண்டு நடைமுறையை ரத்து செய்த உத்தரவை திரும்ப பெற்று தற்போது இருக்கும் நடைமுறையை மீண்டும் செயல்படுத்திட வேண்டும்.

7. மின்வாரியத்தில் ஆரம்பகட்ட பதவிகளை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

(I) மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை வாரிய ஆணை 9 நாள் 09.01.2008 படி அடையாளங்கண்டு 22.02.2018 அன்று ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ளவாறு தினக்கூலி ரூ.380/-ஐ மின்வாரியம் நேரடியாக வழங்கிட வேண்டும்.

(II) கேங்மேன் பதவிக்கு தேர்ச்சி பெற்றவர்களுக்கு வாரிய நிர்வாகமும், தமிழக அரசும் அறிவித்தது போல 10000 பேருக்கான பணி நியமன உத்தரவை உடனடியாக வழங்கிட வேண்டும்.

(III) தமிழக அரசின் கொள்கை முடிவை அடுத்து வாரிய கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு கீழ்கண்ட பதவிகளை நிரப்பிடுவதற்கு,

600 உதவி பொறியாளர்கள் 1300 கணக்கீட்டாளர்கள் 500 இளநிலை உதவியாளர்கள் பணி நியமனத்திற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டது. இந்த பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் எழுத்து தேர்வுக்காக காத்திருக்கிறார்கள். உடனடியாக எழுத்து தேர்வு நடத்தி தகுதியானவர்களை தேர்வு செய்ய வேண்டும்.

(IV) (அ) 2900 களஉதவியாளர் பதவிக்கு ஐடிஐ தொழில்நுட்பம் பயின்றவர்கள்.

(ஆ) 500 தொழில்நுட்ப உதவியாளர்கள்

ஆகிய பதவிகளை நிரப்புவதற்கு அறிவிப்பு நிலையிலேயே உள்ளது.

(V) தற்போது 23000 களஉதவியாளர் பதவிகளும் 8206 கம்பியாளர் பதவிகளும் 3380 கணக்கீட்டாளர் பதவிகளும் 1430 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளும், 1000-த்திற்கும் மேற்பட்ட இளநிலை உதவியாளர் பதவிகளும் 1500-க்கும் மேற்பட்ட உதவி பொறியாளர்

பதவிகளும் காலிப்பணி இடங்களாக உள்ளதை கணக்கில் கொண்டு மின் நுகர்வோர் சேவை தொடர்ந்திட உடனடியாக காலிப்பணி இடங்களை நிரப்பிட வேண்டுகிறோம்.

8. பகுதிநேர பணியாளர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கக்கோரி நாங்கள் நடத்திய இயக்கத்தின் காரணமாக கடந்த 22.12.2016-ல் வாரிய உயர் அலுவலர்களால் அடையாளம் காணப்பட்டவர்களுக்கு நிரந்தரப்படுத்துவதற்கான உத்திரவு வழங்கப்படும் என எழுத்து பூர்வமாக உறுதியளித்தனர். மீண்டும் தொடர்ச்சியாக பல்வேறு காரணங்களால் கால தாமதம் செய்து வந்த நிலையில் நாங்கள் வற்புறுத்தியதை அடுத்து 18 மின் வட்டங்களுக்கு 516 பேர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டது. மீதமுள்ள வட்டங்களில் உள்ள 1100 பேர்களுக்கு இன்னும் உத்தரவு வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே விரைந்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

9. மின்வாரிய ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கான கமிட்டி வாரிய ஆணை 224 நாள் 07.10.2019 உத்தரவின் மூலம் அமைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை உடனடியாக துவங்கிட வேண்டும்.

10. கொரானா தொற்று நோய்க்கு பாதிக்கப்பட்டு இறந்து போன மின்வாரிய ஊழியர்களின் குடும்பத்திற்கு அரசு உத்திரவின்படி முன்களப்பணியாளர்கள் என்ற முறையில் ரூ.25 லட்சம் வழங்கிட வேண்டும்.

11. கொரானா காலத்தில் மத்திய, மாநில அரசுகளால் முழுஅடைப்பு அறிவிக்கப்பட்டு பொதுப்போக்குவரத்து வசதியின்றியும், நிர்வாகத்தால் போக்குவரத்து வசதிகளை செய்திடாத சூழலில், பணிக்கு வரமுடியாத ஊழியர்களுக்கு அரசு ஆணை 304-ன்படி சிறப்பு விடுப்பு அளித்து உத்திரவு பிறப்பித்திட வேண்டும். அதே போல கொரானா தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு விடுப்பும் அனுமதித்திட வேண்டும். மேலும் ஊனமுற்றோர்க்கான சிறப்பு விடுப்பு 01.08.2020 முதல் 31.08.2020 வரை நீட்டிக்கப்பட வேண்டும்.

12. பட்டயம் அல்லாத (Non Diplomo) இளமின் பொறியாளர்களுக்கு 2-ம் நிலையிலிருந்து இளமின் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் உடனடியாக வழங்கிட வேண்டும்.

13. உதவிப்பொறியாளர் (மின்னியல்) பதவியிலிருந்து உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கிட வேண்டும்.

**எனவே,**

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் மேற்கண்ட கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து தீர்வு காண்பதோடு தொழிற்உறவை மேம்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
**பொதுச் செயலாளர்**

# மறுசீரமைப்பு குறித்து மத்திய அமைப்பு வாரியத்திற்கு அளித்த கடிதம்

பெறுநர் **நாள்** : 30.11.2020

தலைமைப்பொறியாளர்/ பணியமைப்பு அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

பொருள் : **தமிழ்நாடு மின்சார வாரியம் மறுசீரமைப்பு - தொழிலாளர்துறை குறிப்பின் மீது கருத்துக்கள் கோரியது - கருத்துக்கள் தெரிவிப்பது - தொடர்பாக கோருவது - தொடர்பாக**

பார்வை :
1. CE/Pl. Lr No.002541/30/G43/G432/2020 dt 13.01.2020
2. CE/Pl. Lr No.002541/30/G43/G432/2020 dt 24.08.2020
3. G.O.(MS) No.114 dated 08.10.2008
4. G.O.(MS) No.100 dated 19.10.2010
5. வழக்கு எண் 24641/2010
6. CE/P/ Chennai Affidavit 01/11/2010 filled on W.P.No. 24641/2010
7. Interim Order Passed by Chennai High Court on W.P. No. 24641/ 2010 dt 27.11.2011
8. Board proposal : Letter No. 046299/452/G43/G431/2009-27 dt 01.12.2010
9. Board proposal: Letter No. 053806106/G43/G431/2012-1 dt 25.06.2012

தமிழ்நாடு மின்சார வாரியம் மறுசீரமைப்பு தொடர்பாக பார்வை 1-ல் கண்ட கடிதம் வாயிலாக தொழிலாளர் துறையிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனையின் பேரில் தொழிற்சங்கங்களின் கருத்துக்களை கோரியிருந்தீர்கள். அதன் அடிப்படையில் எங்களது சங்கமான தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) சார்பாக கருத்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொழிற்சங்கங்களுடன் கலந்து பேசி உடன்பாடு எட்டிய பின்பு தொழிலாளர் துறைக்கு அளித்து அதன் பின் ஒப்பந்தம் காணுவது என்பது தான் கடந்த கால வரலாறு.

மின்சார சட்டம் 2003-ன் அடிப்படையில், பார்வை-3-ல் கண்ட அரசு ஆணைபடி தமிழ்நாடு மின்சார வாரியம் மறுசீரமைப்பு செய்யகொள்கை ரீதியாக ஒப்புதல் அளித்து, TNEB லிமிடெட் என்ற முதன்மை நிறுவனமாகவும், TANGEDCO மற்றும் TANTRANSCO என்ற இரண்டு துணை நிறுவனமாகவும் **முழுமையாக தமிழக அரசுக்கு சொந்தமான நிறுவனமாக** மறுசீரமைக்கப் பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்ட நிலையில் அரசு ஆணை **G.O.(MS) No.100 dt 19.10.2010** மூலம் மின்வாரியத்தின் அசையும், அசையா சொத்துக்களையும் மற்றும் பணியாளர்களையும் தமிழக அரசுக்கு சொந்தமான பிரிக்கப்பட்ட இந்த நிறுவனங்களுக்கு பரிமாற்றம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் வெளியிடப்பட்டது.

இந்த ஆணை 100 முழுமையாக அமல்படுத்தப்பட்டால் மின்வாரிய ஊழியர்களின் நலன்கள்

பாதிக்கப்படும் என்பதனால் எங்களது சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தது. வழக்கு விசாரணையில் வாரியத்தரப்பு வழக்கறிஞர்கள் அரசாணை 100-ஐ அமல்படுத்தினால் ஊழியர்களின் எந்த நலனும் பாதிக்காது எனவும் எந்த உரிமையும் பறிக்கப்பட மாட்டாது என வாதத்தை முன் வைத்தனர். வழக்கறிஞர்களின் வாதத்தை மின்வாரிய நிர்வாகம் எழுத்துப் பூர்வமாக பிரமாண பத்திரமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி அரசு ஆணை 100 நாள்19.10.2010-க்கு சென்னை உயர்நீதி மன்றம் 29.10.2010-ல் தடைவிதித்து உத்திரவு பிறப்பித்தது.

சென்னை உயர்நீதிமன்ற உத்திரவின் அடிப்படையில் ஊழியர்களின் நலன் உரிமைகள் பறிக்கப்பட மாட்டாது என 01.11.2010-ல் எழுத்துப்பூர்வமான பிரமாண பத்திரத்தை தலைமைப்பொறியாளர்/ பணியமைப்பு அவர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். வாரியம் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தின் உத்தரவாதத்தை ஆவணப்படுத்தி சென்னை உயர்நீதி மன்றம் 27.01.2011 அன்று அரசு ஆணை 100-க்கு விதித்த தடையை நீக்கி G.O.100-ன் அமுலாக்கம் இறுதி தீர்ப்பிற்கு கட்டுப்பட்டது என இடைக்கால தீர்ப்பை வழங்கியது.

ஆனால் நீதிமன்றத்தில் வாரியத்தின் பிரமாண பத்திரத்தின் அடிப்படையில் இடைக்கால தீர்ப்பில் கூறப்பட்ட வாசகங்களை மீறுகின்ற வகையில் மின்வாரியமும் தமிழக அரசும், தமிழ்நாடு மின்சார வாரியம் மறுசீரமைப்பு தொடர்பாக தற்போது பார்வை - 1ல் வழங்கிய ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் உயர்நீதி மன்றத்தில் சமர்பிக்கப்பட்ட பிரமாண பத்திரத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்களுக்கு மாறாக தற்போது ஆலோசனை அளித்திருப்பது நீதிமன்ற அவமதிப்பு செயல் என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

மேலும் தாங்கள் தற்போது வழங்கிய ஆலோசனையில்,

5(3)-ல் மின்வாரியம் மறுசீரமைப்பால் ஊழியர்கள்/ அலுவலர்கள் எண்ணிக்கை குறைப்போ/ பணி நீக்கமோ இருக்காது என்று வாரியம் ஏற்கனவே உறுதி மொழியாக **UNDERTAKE / GUARANTEE** என்ற வார்த்தையை நீதிமன்றத்தில் உறுதிமொழி பத்திரத்தில் தாக்கல் செய்ததையும், அதே போல 01.12.2010 மற்றும் 25.06.2012-ல் வழங்கிய ஆலோசனையில் தெரிவித்த கருத்துக்களை மீறி, தற்பொழுது **GUARANTEE** என்ற வார்த்தையை நீக்குவது ஏற்புடையதல்ல என்பதை சுட்டிக் காட்டவிரும்புகிறோம்.

5(7)-ல் மின்வாரிய ஓய்வூதியர்/ குடும்ப ஓய்வூதியர் ஆகியோருக்கான ஓய்வூதியம், ஓய்வூதிகால பணப்பயன்கள், இறப்பு சலுகைகள் உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் எந்த நிபந்தனையும் இல்லாமல் தொடரும் என தமிழக அரசும், மின்வாரியமும் நீதிமன்றத்தில் அளித்த உறுதி மொழியும், ஏற்கனவே வழங்கிய இரு ஆலோசனைகளில் தெரிவித்ததை தற்பொழுது **Unconditionally** என்ற வார்த்தையை நீக்கிவிடுவது என்பது ஏற்புடையதல்ல.

5(9)-ல் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், கருணைத்தொகை ஓய்வூதியம், உள்ளிட்ட இதர ஓய்வுக்கால சலுகைகள் தொடர்ந்து வழங்குவதை உயர்நீதி மன்றத்தில் பிரமாண பத்திரத்தில் தெரிவித்ததையும் கணக்கில் கொள்ளாமல் ஏற்கனவே வழங்கிய இரு ஆலோசனைகளிலும் சிறப்பு நிதியம் உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்ததை தற்போது கைவிடுவது ஏற்புடையதல்ல என்பதோடு ஓய்வூதியம் மற்றும் ஊழியர்களின் ஓய்வுகால பயன்கள் கேள்விக்குறியாக எதிர்காலத்தில் மாற வாய்ப்பு உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஏற்கனவே மின்வாரிய நிர்வாகம் சிறப்பு நிதியம் உருவாக்கப்பட்டு வாரிய ஆணை எண் (Per) TANGEDCO Proceedings (FB) No.13 dt 09.12.2016 மூலம் மாதம் ஒன்றுக்கு 20 கோடி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது சிறப்பு நிதியத்தை உருவாக்க வேண்டியதில்லை என கூறுவது சரியல்ல.

எனவே நீதிமன்றத்தில் சமர்ப்பித்த உறுதிமொழியின் அடிப்படையில் தற்போது பெற்று வரும் ஓய்வுகால பணப்பயன்கள், ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்து பணப்பயன்களை வழங்க உத்திரவாதப்படுத்தும் வகையில் சரத்துக்கள் சேர்க்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

5(10)-ல் வாரிய ஊழியர்கள்/அலுவலர்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள நலம் சார்ந்த நடவடிக்கைகளான வாரிசு வேலை,மருத்துவபடி,வீட்டுக்கடன், வாகனக்கடன், திருமணக்கடன் மற்றும் பண்டிகை முன்பணம் ஆகியவை தொடரும் என்றும் தமிழக அரசு அதன் ஊழியர்களுக்கு அளிக்கும் அனைத்து சலுகைகளும் மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்ற ஷரத்து இருந்ததை தற்போது மின்வாரிய பிரிப்புக்கு பின் செயல்படும் அந்தந்த கம்பெனிகளின் நிர்வாகக்குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது என்பது சரியல்ல,

எனவே தொடர்ந்து தமிழக அரசு தனது ஊழியர்களுக்கு அளிக்கின்ற சலுகைகளை மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்துகின்ற வகையில் இருக்க வேண்டும்.

5(12)-ல் மின்வாரிய ஊழியர்கள், ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள், கருணை தொகை ஓய்வூதியர்கள், நலன்கள் பாதுகாக்கப்படும் என மின்வாரியம் சென்னை உயர்நீதி மன்றத்தில் அளித்த உறுதி மொழி தற்பொழுது மீறப்பட்டு மின்வாரிய பிரிப்புக்கு பின் அந்த அந்த கம்பெனிகளின் நிர்வாகக்குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது என்பது சரியல்ல. மின் ஊழியர்கள், ஓய்வூதியர்கள், ஆகியோர்களுக்கு வழங்க வேண்டிய பணப்பயன்களை தொடர்ந்து வழங்க வேண்டிய பொறுப்பிலிருந்து மின்வாரிய நிர்வாகமும், அரசும் விலகிக்கொள்கிறதோ என்ற அச்சம் எழுகிறது. எனவே மின்வாரியம் மற்றும் தமிழக அரசால் மின் வாரிய ஊழியர்களின் நலன்கள் பாதுக்காக்கப்படும் என்ற உறுதி மொழி இருக்கப்பட வேண்டும்.

5(16)-ல் மின்வாரிய பிரிப்பு/ பரிமாற்றல் காலத்தில் ஊழியர்கள், அலுவலர்களுக்கு ஏற்படும் குறைபாடுகளை சரிசெய்ய அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் தனித்தனியே “குறைகளை கையாளும் கமிட்டி நிறுவப்படும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கமிட்டியில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் சங்கங்களை பிரதிநிதித்துவம் அமைகின்ற வகையில் இருக்க வேண்டும்.

5(22) புதியவிதிகளையும் ஒழுங்குமுறை விதிகளையும், நிலையாணைகளையும் உருவாக்க, தொழிற்சங்கத்துடன் மின்வாரியத்திடமும் கலந்து ஆலோசிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும் பிரிக்கப்பட்ட மூன்று நிறுவனங்களும் முழுமையாக தமிழக அரசுக்கு சொந்தமானவை என்பதால், தமிழக அரசின் விதிமுறையை பின்பற்றுவதையே உறுதி செய்ய வேண்டும்.

மேலும் பார்வை 9ன் மூலம் 25.06.2012-ல் பணியாளர் மற்றும் அதிகாரிகளுக்கு, மின்வாரியம் ஆலோசனை வழங்கிய பிறகு பார்வை-8 ன் மூலம் 1.12.2010-ல் பணியாளருக்கு மட்டும் வாரியம் அளித்த ஆலோசனை மீது தொழிலாளர் நல ஆணையர் அளித்த குறிப்பு மீது தற்போது பார்வை-1ன் மூலம் 13.1.2020-ல் முரண்பாடாக கருத்து கேட்டு உள்ளதை திரும்ப பெற வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

மின்வாரியம் பிரிப்பு சம்மந்தமாக எங்கள் சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில், ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் ஆகியோரின் நலன் சார்ந்த விஷயங்களை உறுதிப்படுத்துவோம் என்று வாரிய நிர்வாகம் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்ததை தொடர்ந்து வழங்கப்பட்ட இடைக்கால தீர்ப்பை வாரிய நிர்வாகம் கவனத்தில் கொள்ளவில்லை. எனவே, பார்வை 8-ல் ஏற்கனவே வாரியம் தந்த ஆலோசனையில் தெரிவிக்கப்பட்ட ஊழியர் நலன் சார்ந்த கருத்துக்களை உத்திரவாதப்படுத்தியும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழங்கப்பட்ட இடைக்கால தீர்ப்பின் அடிப்படையிலும் பேச்சு வார்த்தை நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் தமிழக மின்வாரியத்தில் மறுசீரமைப்பு தொடர்பாக பணியாளர்கள் நலன் சார்ந்த தமிழக அரசின் உத்தரவாதத்தோடு, ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்கள் பாதுகாக்கும் வகையில் தொழிற்சங்கங்களோடு தொடந்து பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
**பொதுச் செயலாளர்**

# பேச்சு வார்த்தையின் போது

# ஒப்பந்த தொழிலாளி நிரந்தரம் குறித்து வாரியத் தலைவரிடம் அளித்த கடிதம்

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,**
**144, அண்ணாசாலை,**
**சென்னை 600 002**
**ஐயா**

**பொருள் :** **பணியமைப்பு - நிர்வாகம் - தமிழக மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு வாரியமே ரூ.380/-ஐ தினக்கூலியாக நேரிடையாக வழங்கி அடையாளங்கண்டு நிரந்தரப்படுத்துவது அதற்கான குழு அமைப்பது - தொடர்பாக**

**பார்வை :**

1. Memo No 003907/ G58/G582/2008 dt 01.2008
2. B.P. (Chairman) No 9 (Adm Br) dt 09.01.2008.

2A. Memo No 012267/ 58/ 582/ 2008-1 dt 20.02.2008

2B. Memo No 012267/ 58/ 582/ 2008-2 dt 04.03.2008

3. Memo No 070567/ 3616/ G45/G451/2008 -1/ dt 26.08.2008
4. Memo No 012267/ G58/G582/2008-3 dt 15.05.2008
5. Memo No 105179/ G65/G651/2008 dt 30.05.2009
6. Lr No 012267/ G58/ G582/2008-10 dt 10.02.2009
7. Per BP (FB) No. 20 Adm Br dt 23.11.2009
8. 09.01.2014 ஏற்பட்ட ஒப்பந்தத்தில் மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு தொடர்பான குறிப்பு
9. Per BP (FB)TANGEDCO Proceedings 3 Adm Br dt 23.01.2014
10. Circular memo No. CFC/G/FC/P/DFC/W/AAO/T/D27/PR No 108/17 dt 12.07.2017
11. 22.02.2018-ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் மின்வாரிய ஊழியர்களுக்கு 01.12.2015 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பாக முத்தரப்பு ஒப்பந்தம் 22.02.2018 அன்று ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு ரூ.250/- லிருந்து ரூ.380/-ஆக தினக்கூலியை உயர்த்தி ஒப்பந்தம் காணப்பட்டது. ஆனால் மின்வாரியத்தல் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்ட நிர்ணயிக்கப்பபட்ட தினக்கூலியான ரூ.380/- ஐ வழங்க நடவடிக்கை எடுக்காததை தங்களின் கவனத்திற்கும், உடன் நடவடிக்கைக்கும் கொண்டு வர விரும்புகிறோம்.

மின்வாரியத்தின் அனைத்து அசைவுகளிலும் ஒப்பந்த தொழிலாளர்களின் பங்கு உள்ள நேரத்தில் அவர்களின் கூலி உயர்வு அவர்களை மின்வாரியத்தோடு இணைப்பது போன்றவைகள் ஒப்பந்த ஷரத்தில் இடம் பெற செய்வதன் மூலம் தான் அப்பகுதி தொழிலாளிகளுக்கு இந்த ஒப்பந்தத்தின் மூலம் நியாயம் வழங்குவதாக அமையும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறோம்.

மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்று 10.08.2007 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஏற்பட்டு 21,600 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். அவ்வாறு பணி நிரந்தரம் செய்கின்ற போது பணி நிரந்தரத்தில் விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்களை 25.10.2012 ஆம் ஆண்டு 4263 ஒப்பந்த தொழிலாளர்களை மஸ்தூர் பயிற்சியாளராக பணி நியமனம் செய்யப்பட்டனர்.

2007 ஆம் ஆண்டுக்கு பின்னர் 2017 ஆம் ஆண்டு வரை பல லட்சக்கணக்கான மின் இணைப்புகள் கூடுதலாகி உள்ளன. அதற்கேற்ப **மின்வாரிய ஆரம்ப கட்ட பதவிகளான களஉதவியாளர் பதவிகளை நிரப்பாத காரணத்தால் கூடுதலான பணிச்சுமைகளை மின்வாரியத்தில் பணிபுரியும் நிரந்தர தொழிலாளர்களுக்கு அப்பாலும் ஒரு மனித சக்தியை பயன்படுத்தி மின்வாரிய பணிகளை செய்வது என்பது தான் மின் வாரியத்தின் வரலாறாக உள்ளது.** இந்த பின்னணியில் மின்வாரியத்தல் இப்போதுள்ள பணி நிலைமையில் ஒப்பந்த, தினக்கூலி, அவுட்சோர்சிங் தொழிலாளிகளை தொடர்ச்சியாக பணிக்கு அமர்த்தாமல் பணியை முழுமைப்படுத்த முடியாது என்பது தான் வாரிய நிகழ்விலிருந்து வாரியம் உணர்ந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

பார்வை1-இல் கண்ட குறிப்பாணையில் ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக 10.08.2007-ல் ஒப்பந்தம் ஏற்பட்டு தவணை முறையில் 21600 ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற உத்தரவுக்குப் பின்னர் மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தக் கூடாது. இதை கடுமையாக கடைபிடிக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது ஆனால் அதை பின்பற்ற இயலவில்லை. ஒப்பந்த தொழிலாளிகள் இல்லாமல் வாரியப் பணியை முழுமைப்படுத்த இயலவில்லை என்ற கீழ்மட்டத்திலிருந்து வேண்டுகோள் வந்ததின் அடிப்படையில் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துக் கூடாது என்பதை மாற்றி ஒப்பந்த தொழிலாளர்களை தேவையின் அடிப்படையில் ( Need basis ) பணிக்கு அமர்த்திக் கொள்ளுங்கள் என்ற நிலைமையும் உருவாயிற்று.

பார்வை 2ல் கண்ட வாரிய உத்தரவின் அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங் கண்டு அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டிய நிகழ்ச்சியும் நடந்துள்ளது.

பார்வை 3ல் கண்ட வாரிய குறிப்பாணையின் அடிப்படையில் 8.8.1998ல் அடையாளங் காணப்பட்டு ஊக்கத் தொகை வழங்குவதில் விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

பார்வை 4ல் கண்ட வாரிய குறிப்பாணையின் அடிப்படையில் 10.8.2007 ஒப்பந்தத்தில் இடம் பெறாத ஆனால் தொடர்ந்து பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் பட்டியல் கேட்கப்பட்டு அவர்களுக்கு தொடர்ந்து பணி வழங்க வேண்டும் என்ற அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

பார்வை 6ல் கண்ட வாரிய கடிதத்தில் தேவை அடிப்படையில் ( Need basis ) பணி நியமனம் செய்யப்பட்டு பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு வாரிய நிர்வாகமே வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட ரூ.70/-ஐ தினக்கூலியாக வழங்குவதற்கு திட்டங்களில் இருந்து பட்டியல் கேட்கப்பட்டு கூலிப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்பதை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

பார்வை 7ல் கண்ட வாரிய உத்தரவில் மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ. 70/-ஐ, ரூ.120/- ஆக உயர்த்தி பிறப்பிக்கப்பட்ட வாரிய உத்தரவையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

பார்வை 8ல் கண்ட வாரிய உத்திரவின்படி மின் வாரிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு தினக்கூலி ரூ. 120/-ல் இருந்து ரூ.250/-ஆக உயர்த்த வகை செய்யும் ஷரத்து சேர்க்கப்பட்டுள்ளதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

பார்வை 9ல் கண்ட வாரிய உத்தரவில் வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளுக்கு தினக்கூலியாக ரூ.250/- என நிர்ணயிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படும் போதெல்லாம் அவர்களின் தினக்கூலியில் மாற்றம் என்பது மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள் என்பதை வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

பார்வை 10ல் கண்ட வாரிய சுற்றறிக்கை குறிப்பாணையில் மின்வாரிய விரிவாக்கப் பணிகளை செய்ய கே2 அக்ரிமெண்ட் அடிப்படையில் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துகின்ற வகையில் சில சரத்துகளை தளர்த்தி உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட ஒக்கி புயலின் பழுதுகளை சரிசெய்யும் பணியில், தங்களது வாரிய உத்தரவு எண் 640 நாள் 4.12.2017-ல் குறிப்பிட்டவாறு Tangedco வில் இல்லாத ஆனால் Tangedco வில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களே கூடுதலான எண்ணிக்கையில் பணியாற்றி உள்ளார்கள்.

மின் வாரியத்தில் 10.8.2017 ஒப்பந்தத்தின் அடிப்படையில், மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்ட பின்னர், மின்வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தக் கூடாது என்ற முடிவை அமலாக்க இயலாமல் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், அவர்களுக்கு தினக்கூலி நிர்ணயம் செய்தல், தினக்கூலியை உயர்த்திக் கொடுத்தல், ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை வழங்குவது போன்றவைகளிலிருந்து மின்வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர்ந்து பணியாற்றுவது என்பது தவிர்க்க இயலாது என ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்திலும் மின் வாரியத்தில் பணியாற்றுகின்ற ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு அளிக்கப்பட்டது என்பதை சுட்டிக்காட்டிட விரும்புகின்றோம்.

22.02.2018 அன்று ஊதிய உயர்வு வேலைப்பளு சம்மந்தமாக ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்வு காணப்படாத பல்வேறு கோரிக்கைகளின் மீது தீர்வு கண்டு வாரிய உத்திரவுகளும் வெளியிடப்பட்டுவருகிறது.

ஆனால் ஒப்பந்தத்தில் உள்ளபடி மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு ரூ.380/- தினக்கூலி வழங்கிட அவர்களை அடையாளம் காண ஏற்கனவே அமைக்கப்பட்ட குழு போல (B.P. (Chairman) No 9 (Adm Br) dt 09.01.2008) அமைத்து, அடையாளம் காண வேண்டும். அவ்வாறு அடையாளம் கண்டவர்களுக்கு வாரியமே நேரிடையாக ரூ.380/- தினக்கூலி வழங்கி படிப்படியாக கள உதவியாளர் பணியிடத்தில் அமர்த்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**

**பொதுச் செயலாளர்**

# வேல் யாத்திரை யாருக்காக...



நவம்பர் மாதம் 6-ம்தேதி தமிழக பாஜக வெற்றிவேல் யாத்திரையை எல்.முருகன் தலைமையில் நடத்தியது. காவல்துறை கைது செய்தது. மீண்டும் வேல்யாத்திரை, மீண்டும் கைது என தொடர்ந்தது பாஜகவின் அரசியல் கிளர்ச்சி. இதன் மூலம் தமிழ்நாட்டில் பிஜேபிக்கு பெரிய ஆதரவு தளம் உருவாகும் என்றும் தமிழக அரசியலில் பெரிய மாற்றத்தை கொண்டுவரும் என்றும் அதனால் தான் எதிர்க்கட்சிகள் இதைப்பார்த்து பயப்படுகின்றன என்றும் நமது மனித முருகன் அவர்கள் தனது அபிலாசையை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

ரத யாத்திரை நடத்தி ஆட்சியை பிடித்த கலவர சங்கிகள் அப்படியான சிந்தனை ஓட்டத்தில் இருந்து இன்னும் விடுபடவில்லை. ஆனால் அசாத்திய மனத்திடம் எப்போதும் வெற்றிப்பெற்று விடுவதில்லை. எந்த வகையான சமூக பிரச்சனை களுக்கும் வாயே திறக்காத இந்த காரியவாத கூட்டம் மதரீதியான ஏதாவது பிரச்சனை மாட்டாதா. அதை வைத்து தங்களின் அரசியல் அரிப்பை தீர்த்துக் கொள்ள முடியாதா என அலைந்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏதோ இந்து மதத்தின் அத்தாரிட்டியே தாங்கள் தான் என்பது போல காட்டு கூச்சல் போடும் இவர்களை குறைந்தபட்சம் சிந்திக்கும் ஆற்றலுள்ள ஒரு இந்து கூட ஏற்றுக் கொள்ளமாட்டான். மூக்குத்தி அம்மன் படமே இதற்கு சான்று.

உண்மையிலேயே தமிழ் மீதும் தமிழ்நாட்டு மக்கள் மீதும், பிஜேபிக்கு மரியாதை இருக்குமானால் அனைத்து முருகன் கோயிலிலும் தமிழில் மந்திரம் சொல்ல வேண்டும் என்றல்லவா முதலில் பிஜேபி யாத்திரை சென்றிருக்க வேண்டும்.

ஆனால் சமஸ்கிருத இந்தி அடிமைகளான அவர்களால் ஒரு போதும் அப்படி செய்ய முடியாது. அதனால் தான் முருகனை முன்னிலைப்படுத்தாமல் அவர்கள் வேலை முன்னிலைப் படுத்துகின்றார்கள். முருகனை முன்னிலைப்படுத்தினால் தமிழர்களின் பூர்விக வழிபாட்டு முருகனும் பிஜேபி தூக்கிப்பிடிக்கும் பார்ப்பன கந்தனும் வேறு வேறு என்றும் மீண்டும் புயலை கிளப்ப ஆரம்பித்து விடுவார்கள் என்பதால் தான் பாதுகாப்பாக வேலை மட்டும் தனியாக பிரித்து அதை அரசியல் படுத்துகின்றார்கள்.

உணவைத் தேடவும், மிருகங்களை வேட்டையாடவும் ஆதிதமிழன் உற்பத்தி செய்த கருவிதான் வேல் என்பது, வேல் வழிபாடு தான் முருகனுக்கு முந்திய வழிபாடாகும். காலப்போக்கில் வேல் வழிபாடு முருக வழிபாடாக மாறியது. முருகன் கடவுளாகவும் வேலை எடுத்து வெறியாடும் நபரின் பெயர் வேலன் என்றும் ஆகியது.

சங்க இலக்கியத்தின் வழி இதை நம்மால் அறிய முடியும். தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டத்தில் உள்ள ஆதிச்ச நல்லூரில் நடந்த அகழ்வாராய்ச்சியில் வேல் தான் கிடைத்ததே அல்லாமல் முருகன் சிலை எதுவும் கிடைக்கவில்லை.

சங்க இலக்கியங்களின் படி முருகன் குறிஞ்சி நிலத்தின் கடவுள் ஆவான். அவனது பூசாரியான வேலனுக்கு என்ன வேலை என்றால் வெறியாடி குறிசொல்வது. தலைவியின் காதல் நோயால் மெய்ப்பாடு தோன்றும் பொழுது தாயும் செவிலியும் அந்நோய் இன்னது என்று அறிய வேலனை அழைத்து வெறியாட்டம் நிகழ்த்தி வினைவுவர்.

இச்சமயங்களில் ஆடறுத்து ஆடுகளத்தை மெழுகி, வேலனைத் தருவித்து வெறியாட வைப்பார்கள். வேலன் வருங்காலம் பற்றி குறி சொல்வதோடு மந்திர மருத்துவனாகவும் இருப்பான்.

கூழைக்கும்பிடு போடும் வழிபாட்டு முறை அப்போது இல்லை. என்பதும் இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். முருகனது வேலை என்பது தலைவியின் நோய்க்கான காரணத்தைக் கூறுவது மட்டுமே.

பரிபாடல் காலத்திலும் திருமுருகாற்றுப் படை காலத்திலும் முருகனுக்கு என்று ஆறுபடை கோவில்கள் உருவாகிவிட்ட நிலையை காண

முடிகின்றது. மேலும் பரிபாடலிலும், திருமுருகாற்றுப்படையிலும் குறிப்பிடப்படும் முருகன் தமிழக மக்கள் வணங்கிய முருகன் அல்ல. அது வடநாட்டு மக்கள் வணங்கிய ஸ்கந்தன் என்பது இந்த நூல்கள் வழி அறிய முடிகின்றது.

தமிழ்நாட்டு மக்கள் வணங்கிய முருகனுக்கு அப்பன் பெயர் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.பழையோள் சிறுவன், கொற்றவை செல்வன் என்றே முற்பட்ட சங்க இலக்கியங்களில் அழைக்கப்படுகின்றான். பின்நாளில் வந்த பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற நூல்களிலேயே முருகனின் அப்பன் சிவன் என்று குறிப்பிடப்படுகின்றது.

வடமொழி நூல்களில் ஸ்கந்தனுக்கு அப்பா அக்கினி தான். பின்நாளில் அக்கினி செல்வாக்கு இழந்த போது அவன் ருத்திரனின் மகனாக்கப்பட்டான். இப்போதோ அவன் சிவனின் மகன் ஆவான். ஸ்கந்தனின் அப்பா யாரென்று ஸ்காந்தனுகே தெரியாத நிலையே நீடிக்கின்றது. அப்படிப்பட்ட ஸ்கந்தனை தமிழ் முருகனுடன் இணைத்தது தான் பரிபாடல் மற்றும் திருமுருகாற்றுப்படையின் வேலை.

தமிழ்நாட்டில் உள்ள முருகனுக்கு வள்ளி என்ற ஒரு மனைவி மட்டுமே முற்பட்ட சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றது. முருகு புணர்ந்தியன்ற வள்ளி போல, என்ற மனைவியும் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

பார்ப்பனிய விஸ்வாசிகளுக்கு அடிமைகளாக இருந்த தமிழ்ப்புலவர்கள் முருகனை பிராமணராக்கி சிவனை அவனுக்கு அப்பனாக மாற்றினார்கள். சிவன் வழிபாடு தமிழ்நாட்டில் முற்பட்ட சங்க இலக்கியக் காலத்தில் அவ்வளவு பிரபலமாகவில்லை.சேயோன் ஒரு நிலத்தின் கடவுளாக மட்டுமே குறிப்பிடப்பட்டான்.

வடநாட்டு படைப்பில் தான் ஸ்கந்தன் மயில்,சேவல்,பாம்பு போன்ற விலங்குகனோடு தொடர்புபடுத்தப்படுகின்றான். தமிழ்நாட்டு வழிபாட்டு மரபில் அவனுக்கு மயில் எல்லாம் கிடையாது. திருப்பரங்குன்ற மக்கள் முருகனை இரு வழியாக வழிபட்டத்தைக் குறிப்பிடுகின்றது. கோயில் சிலை உருவில் செவ்வேலையும் கோயிலுக்கு வெளியே கடம்ப மரத்தடியில் வேலன் வெறியாட பொது மக்கள் வேலையும் கடம்ப மரத்யையும் வழிப்பட்டது கூறப்படுகின்றது.

இலக்கியங்கள் துணை கொண்டு பார்க்கும் போது முருகனுக்கான வழிபாடு என்பது நாட்டார் வழிபாட்டு மரபை முழுவதுமாகப் பின்பற்றியதாகவே இருந்திருக்கின்றது. ஆட்டு ரத்தத்தில் திணை வகைகளை பிசைந்து முருகனுக்குப் படைக்கும் வழக்கம் இருந்துள்ளது.

பிற்பட்ட இலக்கியங்களான பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்றவை முருகனுக்கு ஆறுதலைகளும், பன்னிரெண்டு கைகளும் உள்ளது போல குறிப்பிடுகின்றன.

மேலும் முருகனின் அண்ணன் கணேசன் என்பதும் அவர்களின் அப்பா,அம்மா சிவன், பார்வதி தம்பதிகள் என்பதும் உலகைச்சுற்றி வந்து ஞானப்பழத்தை வாங்கும் கதையும் இந்து மதத்தின் புனித சொல்லான ஓம் என்பதும் எந்த முற்பட்ட சங்க இலக்கியத்திலும் கிடையாது என்பதையும் உறுதியாக நாம் சொல்கின்றோம்.

பாஜகவை பொறுத்தவரை ஏற்கனவே தமிழ்நாட்டில் கணிசமாக உள்ள முருக பக்தர்களை எல்லாம் பிஜேபியில் சேர்த்துவிட வேண்டும் என்ற நோக்கம் தவிர அவர்களுக்கு தமிழர்கள் வழிபட்ட அந்த ஆதி முருகனின் மேல் மரியாதை என்பதெல்லாம் இல்லை.

ஆரியவம்சம் வழி வந்த ஒருவருக்கு கூட முருகன் பெயர் இல்லை என்பதும் தமிழ்நாட்டை தாண்டி வேறு எந்த வடஇந்திய மாநிலத்திலும் முருகனுக்கு ஒரு கோயில் கூட கிடையாது என்பதும் அவர்களின் நோக்கத்தை நாம் புரிந்து கொள்ள உதவும்.

தமிழ்நாட்டின் மீது நீட் தேர்வை திணித்து கிராமப்புற மாணவர்களின் மருத்துவ கனவில் நெருப்பு வைத்த கூட்டத்திற்கு தமிழகத்தில் இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிக்கும் கூட்டத்திற்கு, ஜி.எஸ்.டி மூலம் தமிழ் மக்களின் வரிப்பணத்தை எல்லாம் சுருட்டிக் கொண்டு தமிழ்நாடு வெள்ளம் புயல் பேரழிவு நோய்களால் பாதிக்கப்படும் போது கூட பணம் தராமல் கொத்துக்கொத்தாக சாகவிட்டு வேடிக்கை பார்க்கும் கல்நெஞ்சகாரர்களுக்கு, ஆளுநர் போன்ற மத்திய அரசின் ஜால்ராக்கள் மூலம் தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுத்து நிறுத்த முற்படும் பார்ப்பனிய ஆரிய கும்பலுக்கு சரியான பாடம் புகட்ட இந்த நல்வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் பெரியாரிய சிந்தனையும், மார்க்சிய, அம்பேத்கர் சிந்தனை ஓட்டங்கள் மக்கள் மனதில் ஆழமாக பதிந்து விட்ட காரணத்தினால் வேல் யாத்திரை மட்டுமல்ல எந்த யாத்திரையும் பாதிக்காது என்பதை அவர்கள் கட்டாயம் உணர்வார்கள்? மக்கள் உணர்த்துவார்கள்.

**- தி.ஜெயசங்கர்**



# ஆண்டுகள் பல கடந்தாலும் அணையா வெண்மணி தீ !

1968 டிசம்பர் 25 ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் வெண்மணி கிராமத்தில் விவசாய கூலித்தொழிலாளர்களை கொடூரத்தாக்குதல் நடத்தி 44 பேர்களை எரித்துக்கொல்லப்பட்ட வரலாறு இன்றும் விவசாய தொழிலாளர்கள் மத்தியில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

நிலப்பிரத்துவத்தின் கோட்டைக்குள் சாணிப்பாலுக்கும் சவுக்கடிக்கும் அஞ்சி தங்களை இந்த கொடுமையிலிருந்து காப்பாற்ற யாராவது வருவார்களா? என்று எதிர் பார்த்திருந்த காலம்.

பொன்விளையும் பூமியாக தஞ்சை நெற்களஞ்சியத்தை மாற்றிது இதில் உழைத்த பண்ணை அடிமைகளும் பண்ணையாட்டுகளும், இவர்கள் அனைவரும் பெரும்பகுதி ஒடுக்கப்பட்ட தலித் மக்கள்.

தலித் மக்களின் நம்பிக்கையாய் வாழும் இடத்தில் திக்கற்றவர்களாய் ஒடுக்கப்பட்ட அடிமைப்பட்டுக்கிடந்த இந்த மக்களை திரட்டுவதற்காக களம் கண்டார் அன்பு தோழர் பி.சீனிவாசராவ்.

இந்திய தொழிலாளி வர்க்கம் போராட வேண்டியது சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய என தலைவர்கள் உணர்ந்திருந்தனர்.

கல்வி, தீண்டாமை கொடுமை, கூலி மறுப்பு இவைகளைப்பற்றி உணராமல் ஆண்டைகளுக்கு பயந்து தங்களது வாழ்க்கையை எண்ணி நொந்து கொண்டவர்கள் மத்தியில் தோழர் பி.சீனிவாசராவின் வருகை ஒரு எழுச்சியை உருவாக்கி நம்பிக்கை கீற்றை பாய்ச்சியது.

இந்த மக்களுக்கு அவர் சொல்லிக் கொடுத்தது கூலிக்கே வாரம் கூடுதலாக கேள், அடித்தால் திருப்பி அடி, ஊமையாக இருக்காதே, பேசு, கூனனாக இருக்காதே, நிமிர்ந்து கூட மனித உரிமை பெறு, குருடனாக இருக்காதே, கண்ணைத் திறந்து பார் என்பது தான்.

எலும்புகூட புகமுடியாது என்று கூறிக்கொண்டிருந் நிலப்பிரபுத்துவ கோட்டைக்குள் செங்கொடி இயக்கம் மெல்ல மெல்ல புகுந்தது.

இதை பொறுக்க முடியாத ஆண்டைகள் செங்கொடி பந்த கம்பங்களை வெட்டிச்சாய்த்து கலகத்தை உருவாக்கினார்கள். பெண்கள் மீது தாக்குதல், ரௌடிகளை வைத்து உதைத்தல், கற்பழித்தல் சூறையாடல் என அனைத்து விரோத நடவடிக்கைகளையும் காவல்துறையின் ஆசியோடு நடத்தி முடித்தார்கள்.

1968 டிசம்பர் 25-ம் நாள் இரவு எட்டு மணியளவில் 200-க்கும் மேற்பட்ட காவல்துறையின் வாகனத்தில் வந்த வெண்மணி கிராமத்தில் விவசாய கூலித்தொழிலாளர்களை அடிக்கத்தொடங்கி விரட்ட ஆரம்பித்தார்கள். ஆண்கள், பெண்கள், பெண் குழந்தைகள் என அனைவரும் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

தப்பித்து ஓடியவர்களில் இருபது பெண்கள், 19 ஆண்கள், பெண் குழந்தைகள், வயதான 5 ஆண்கள் என 44 பேர்கள் 12-க்கு 12 அளவுள்ள இராமையாவின் குடிசையில் தஞ்சம் புகுந்தனர். ஊரை எரித்த கயவர் கூட்டம் இராமையாவின் வீட்டையும் விட்டு வைக்கவில்லை, அவர்களின் தாகம் 44 பேரரையும் எரித்துக் கொன்ற பின்பு தான் தாகம் அடங்கியது. இந்த மனித மிருகங்கள் கூட்டத்திற்கு கூலி கேட்டதற்கு மட்டுமல்ல, செங்கொடியை இறக்க மாட்டோம் என்று காட்டிய உறுதிக்காக ஊரோடு வீட்டோடு, உயிரோடு ஊனோடு வெண்மணி எரிக்கப்பட்டது.

ஆண்டுகள் கடந்து போகலாம். வெண்மணியில் வைத்த தீ அணையவே அணையாது.

விவசாய தொழிலாளர்களை திரட்டவும், இந்த தியாகங்களை புதிய தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டியது மின் ஊழியர்களின் வர்க்க கடமை.

விவசாய கூலித் தொழிலாளர்களை அணி திரட்டுவோம்!
வர்க்க நலனை முன்னெடுத்துச் செல்வோம்!

# டெல்லியில் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக உலக தொழிற் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்த செய்தி

**WORLD FEDERATION OF TRADE UNIONS**

Class oriented - uniting - democratic - modern – independent – internationalist!

Athens, 02nd December 2020

## WFTU solidarity statement with the farmers' struggle in India

The World Federation of Trade Unions, representing more than 105 million workers who live, work and struggle in 130 countries of the 5 continents, congratulates the awe-inspiring strike that shacked India with the participation of 25 crore workers, farmers, and employees of all sectors. India's trade union movement emphatically and strongly condemned the anti-worker, anti-people and anti-national policies of the Modi government.

The WFTU joins its voices with the trade union movement in India and stands by the side of farmers' unions which are in stay-in protests in the four borders of Delhi, continuing their united struggle for the scrapping of the three farm-laws and also the Electricity Bill 2020. The international class-oriented trade union movement supports the common demands of farmers and workers and all the other demands of the November 26th strike.

We strongly condemn the repression of numerous strike gatherings in several states of India and the false propaganda of the Indian government that aims to defame the trade union struggle and to divide the popular strata. These unacceptable practices reveal once again the authoritarianism of the Indian government but will be in vain. We call upon the workers and farmers of India to continue their struggle until the full satisfaction of their fair demands.

The Secretariat

40, ZAN MOREAS STREET, ATHENS 11745 GREECE
TEL. (+30) 2109214417, (+30) 2109236700, FAX (+30) 210 9214517
www.wftucentral.org E-MAILS : info@wftucentral.org, international@wftucentral.org

1

# இந்தியாவை இருளில் தள்ளும் ஆட்சியாளர்கள்!




இந்தியா ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலையான பொழுது இந்தியாவின் மின் உற்பத்தி 1123 மெகாவாட், ஆனால் இன்றைக்கு 5 ஆண்டு திட்டங்கள் மூலமும், மின் துறையில் தனியாரை ஊக்கு வித்ததன் மூலமும் 3,82,000 மெகாவாட் உற்பத்தி செய்யும் நிலையை இந்த 73 ஆண்டுகளில் அடைந்திருக்கிறோம்.

1947-ம் ஆண்டில் இருந்து நாற்பது ஆண்டுகளில் அதாவது 1991-ல் புதிய பொருளாதார கொள்கை அமுலாக துவங்கிய காலம் வரை 80சதவீத கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது மின்சாரத்துறை. 12.5 கோடி விவசாயிகளுக்கு மின்சாரத்தை வழங்கி பசுமைப் புரட்சிக்கு வித்திட்டது மின்சாரம். அதன் மூலம் உணவு உற்பத்தியில் ஓரளவு தன்னிறைவு அடைய முடிந்தது.

தற்போதைய பி.ஜே.பி. அரசால் 2003-ல் மின்சார சட்டம் கொண்டு வரப்பட்டு பொதுத்துறையாக இருந்த மின்துறை மெல்ல மெல்ல மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி, தனியாரிடம் செல்ல வற்புறுத்தி வருகிறது. ஒவ்வொரு மாநிலமும் தங்களது மின் தேவையில் 65 சதவீதத்தை தாங்களே உற்பத்தி செய்து கொள்ளவும் மீதமுள்ள 35 சதத்தை மத்திய அரசின் தொகுப்பிலிருந்து வழங்கும் உரிமையை மெல்ல மெல்ல கைகழுவ துவங்கியது.

மாநில அரசின் புதிய மின் உற்பத்தி திட்டங்களில் மத்திய அரசு ஆய்வு செய்து அனுமதி வழங்கி திட்டத்தின் செலவினத்தில் ஒரு பகுதியை மாநில அரசுக்கு வழங்கும் நடைமுறையை கைவிட்டது.

பெரும் முதலாளிகளையும், கார்ப்பரேட்டுகளையும் மின் உற்பத்தியில் ஈடுபட தாராளமாக மக்களின் வரிப்பணத்தை வங்கிகளின் மூலம் கடன் கொடுத்தார்கள். மாநில மின்சார வாரியங்கள் அதிகப்படியான விலை கொடுத்து மின்சாரத்தை கொள்முதல் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

பொதுத்துறையின் சொத்துக்களை மிகக்குறைந்த விலைக்கு வாங்கி அல்லது பொதுத்துறையை கபளீகரம் செய்ய இயற்கை வளங்களை சூறையாட கார்ப்பரேட்டுகளுக்கு சிவப்பு கம்பளம் விரித்து அனுமதி அளித்து வருகிறார்கள்.

தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் அரசின் சலுகைகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டு மண்ணின் வளத்தையும், உழைப்பையும் சுரண்டினார்கள். மின்சாரம் என்பது சேவையாக மாறி, சந்தைப்பொருளாக மாற்றப்படுகின்றது.

ஆளும் அரசுகளின் தனியார்மய மோகத்தால் கடந்த 2012-2017 ஆம் ஆண்டுகளுக்கான 12வது ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய அரசு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. 26182, மெகாவாட் ஆனால் இலக்கை அடைந்ததோ 20452.7 மெகாவாட். ஆனால் அதே நேரத்தில் தனியார் பெருமுதலாளிகளுக்கு நிர்ணயித்த இலக்கு 46,825 மெகாவாட் ஆனால் உற்பத்தி செய்ய அடைந்த இலக்கு 54,279.5 மெகாவாட் இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது ஆட்சியாளர்கள் தங்களது ராஜ விசவாசத்தை அம்பானிகளுக்கும், அதானிகளுக்கு மட்டுமே காட்டுகிறார்கள்.

மாநில அரசுகள் நீண்டகால கொள்முதல் மூலம் மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்குவதன் மூலம் கடும் நிதி நெருக்கடியில் சிக்கி மின்துறையை கைகழுவ வாய்ப்பாக கருதுகிறது.

மின்சாரம் தனியாரிடம் சென்றால் சந்தை பொருளாக மாறி வசதியுள்ளவர்களுக்கே மின்சாரம் என்ற நிலை உருவாகி தொழில் நசிந்து விவசாயம் சீரழிந்து, வேலை வாய்ப்புகள் இழந்து மக்கள் அல்லல் படும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

இந்தியா ஒளிர்கிறது என்று முழக்கமிடும் மத்திய பிஜேபி அரசின் இந்த தனியார் மய மோகத்தால் இந்தியா இருளில் தள்ளப்படும் நிலையே ஏற்படும்.

இந்த ஆபத்தை உணர்ந்து விவசாயிகள் நுகர்வோர்கள் ஆகியோருடன் போர் முரசு கொட்ட தயாராவோம்.



# மகிழ்ச்சியாக இருப்பது புத்துணர்ச்சி தருமா?

எல்லாம் விஞ்ஞானமயமான காலத்தில் வாழ்ந்து வரும் இந்த நூற்றாண்டின் மனித இனம், மகிழ்ச்சியை தொலைத்து கொண்டு இருக்கிறது. அதுவும் இந்த அலைபேசி பயன்பாட்டிற்கு பிறகு மொத்தஉலகமும் அதில் தான் நினைத்ததை, பார்ப்பதற்கு, வாங்குவதற்கு உணவு அருந்துவதற்கு, கட்டணம் செலுத்துவதற்கு, வங்கி பரிவர்த்தனை என அனைத்தும் இந்த கையில் பிடிக்கும் அலைபேசியில் நடக்கும்.

இதில் என்ன இருக்கிறது என்ற கேள்வி எழலாம் உறவுகள் தொலைந்து போய்விட்டன. நலம் விசாரிப்புகள் வாட்ஸ் ஆப்பிலும் SMS லும் மட்டுமே ஏதோ நமது வாழ்க்கை சூன்யமாய் விட்டதை உணரும் நாம், இந்த காரணங்களுக்கு காரணம் நாம் என்பதை உணராமல் இருப்பதே! இயந்திரதனமாக வாழ்ந்து வரும் வாழ்க்கை சரியான வாழ்வா?

நாம் யாரிடமாவது எப்படி இருக்கிறீர்களா? எனக் கேள்வி எழுப்பினால்

நமக்கு மூன்று விதமான பதில்கள் கிடைக்கும்

1. ஏதோ இருக்கிறேன்.
2. நல்லா இருக்கிறேன்.
3. மகிழ்ச்சியா இருக்கிறேன்.

இதில் நமது வாழ்வை பற்றி புரிந்து கொள்ளாமல் இருப்பவர்கள் முதல் பதில் சொல்பவர்கள், இரண்டாவது பதில் அளிப்பவர்கள், வாழ்வின் மகிழ்ச்சியை கொஞ்சம் கொண்டாட நினைப்பவர்கள். மூன்றாவது பதில் அளிப்பவர்கள் மகிழ்ச்சியை அனுதினமும் கொண்டாடி கொண்டு வருபவர்கள்.

எந்த பணியை செய்தாலும், அதில் தன்னை முழுமையாக அர்பணித்து செய்கின்ற ஒருவன் அடையும் மகிழ்ச்சி அளவற்றது. மண்பாண்டம் செய்யும் குயவனும், சிலை வடிக்கும் சிற்பியும், படைப்பாளிகளும் ஓவியனும் தன்னை முழுமையாக அதில் ஈடுபடுத்தி கொள்வதால் தான் அதில் வெற்றி பெறுகிறான். சமூகத்தில் அவன் போற்றப்படுகிறான்.

எட்டு மணி நேரம் வேலை எட்டு மணி நேரம் ஓய்வு எட்டு மணி நேரம் உறக்கம் என உரிமையை பெற்ற நாம், நமது பணியை உரிய காலத்தில் செய்ய முடியாமல் போகும் பொழுது கூறும் காரணம் நேரமின்மை.

மகிழ்ச்சி எங்கு கிடைக்கிறது? அழகாய் உள்ள எல்லம் மகிழ்ச்சி தான், நேர்த்தியாக செய்யும் பணியில்பணிவாக பேசும் வார்த்தையில் சுத்தமாக உடுத்தும் ஆடையில் உள்ள துாய்மையிலும் இவையெல்லாவற்றையும் கடந்து பிறரை நேசிப்பது அவரது உரிமைகள் பறிபோகின்ற பொழுது, அவருக்கு இன்னல் ஏற்படுகின்ற பொழுது தோழனாய் உதவி செய்வது மகிழ்ச்சி.

துபாயை தலைமையிடமாக செயல்பட்டு வரும் வர்க்கி குரூப் நிறுவனத் தலைவர் திரு.சன்னி வர்க்கி, வர்க்கி பவுண்டேசன் என்ற அறக்கட்டளையை உருவாக்கியுள்ளார். சர்வதேச அளவில் ஆண்டு தோறும் சிறந்த ஆசிரியரை தேர்வு செய்து பரிசு வழங்கி வருகிறார். இந்த ஆண்டு விருதுக்கு மகராஷ்ட்ரா மாநில அரசு தொடக்கப்பள்ளி ஆகிரியர் திரு.ரஞ்சித் சிங் திகாலே (34வயது) தேர்வு செய்யப்பட்டு ரூ.7.4 கோடி பரிசு வழங்கப்படவுள்ளது. ஆனால் ரஞ்சித்சிங் அவர்களோ இறுதி போட்டியாளர்களான 10 பேரில் மீதமுள்ள 9 பேருக்கு தனக்கு கிடைத்த தொகையையில்

50 சதவீதத்தை பகிர்ந்து அளிப்பதாக கூறியுள்ளார். இது தான் அவருக்கு மகிழ்ச்சி.

நமது மனதில் எதிர்மறை எண்ணங்களை (Negative vibration) அதிகமாக உருவாக்க முற்படுவதும், நம்மை சுற்றி நேர்மறை எண்ணங்களை ( Postive vibration) குறைப்பது நமது மகிழ்ச்சியை, நிம்மதியை குறைக்கும்.

கவலை, கோபம், எரிச்சல், விரத்தி, வெறுப்பு, பொறாமை, மனச்சுமை போன்ற எதிர்மறையான உணர்ச்சிகள் மற்றவர்களை காயப்படுத்துவதோடு நம்மை அவர்களிடமிருந்து விலகச் செய்து விடும். மனமெல்லாம் வெறுப்புணர்ச்சியும், சுயவெறுப்பும் தன்னலமும் நிரம்பி இருந்தால் அதைத்தான் பரவச்செய்ய முடியும்.

எனவே, மகிழ்ச்சிக்கு எது தடையாக இருக்கிறதோ, அதை புரிந்து கொண்டு செயல்படுவோம்! சாதனையாளர்களுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல மகிழ்ச்சி!

ஆகவே தினம் தினம் புதியதாய் பிறந்தவர்களாக செயல்படுவோம்! புத்துணர்ச்சி பெறுவோம்! தோழர்களின் கவலைகளை போக்க திட்டமிடுவோம்! வர்க்கத்தை இணைப்போம் - தடைகளை தகர்ப்போம் .

மகிழ்ச்சி என்பது இடைவிடாத போராட்டமே!

# தெரிந்து கொள்வோம் பயனுள்ள தகவல்



தோழர்களே இன்றைய கால கட்டத்தில் தொலைப்பேசியின் (மொபைல்) பயன்பாடு மிகப்பெரியது கொரானா கால கட்டத்தில் தொடர்புகள், கூட்டங்கள், தகவல்கள் அனைத்தும் வாட்ஸ்அப் வழியாக நடைபெறுகிறது. அனைவரும் அதை பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இணைய வழியை பயன்படுத்தியே ஆக வேண்டும். அதில் வாட்ஸ்அப் முக்கிய பங்கு வகிக்கிறது. நாம் பல வாட்ஸ்அப் குழுக்களில் அறிந்து சேர்கிறோம். அறியாமலும் சேர்க்கப்படுகிறோம். இதனால் நம்முடைய மொபைல் Storage Full ஆகி அவதிப்படுகிறோம். Delete செய்வதே பெரிய வேலையாக விடுகிறது. இதை தவிர்க்க பின்வரும் வழிமுறைகளை பின்பற்றினால் சிரமத்தை தவிர்க்கலாம்.

வாட்ஸ் அப் மூலம் நிறைய வீடியோக்கள் மற்றும் படங்கள் பலகுழுக்களில் இருப்பதால் நமது போனில் டவுன் லோட் ஆவதால் மொபைல் கேலரி நிரம்பி சிரமம் அடைகிறோம். இதனால் தான் இவற்றை அடிக்கடி Delete செய்ய வேண்டி உள்ளது.

இதை தவிர்க்க வாட்ஸ்அப்பில் செயல்பாட்டிற்கு மட்டும் ஒரு அம்சம் உள்ளது. அதன் மூலம் படங்களையும், வீடியோக்களையும் நம்முடைய மொபைல் கேலரியில் Save ஆகாமல் குரூப்பில் மட்டுமே பார்க்கலாம்.

அதற்கு சில வழிமுறைகள் உள்ளது.

செயல்படுத்தும் முறை

குரூப்பில் வலது மேல் பக்க மூலையில் தெரியும் மூன்று புள்ளிகளை அழுத்தவும்.

அப்பொழுது

Group Info<br>
Group Media<br>
Search<br>
Mute Notification<br>
Wall Paper<br>
More - என்று வரும் அதில் முதலில் உள்ள Group Info வை அழுத்தவும் அப்போது மூன்று தெரிவுகள் காண்பீர்கள்.

1. Mute Notification
2. Custom
3. Media Visibilty என்று வரும் அதில் மூன்றாவதில் உள்ள Media Visibilty அழுத்தவும்

அப்பொழுது

Default

Yes / No என்று காணப்படும் அதில் No வை அழுத்தி பின்னர் OK செய்யவும். இப்பொழுது வீடியோக்கள், படங்கள் நம்முடைய மொபைல் கேலரியில் சேமிக்கப்பட மாட்டாது. உங்கள் குழுவில் மட்டுமே தெரியும்.

இப்படி செய்வதின் மூலம் நாம் எத்தனை குழுக்களில் இருந்தாலும் மொபைலை பாதுகாக்கலாம். Delete செய்யும் நேரத்தை மிச்சப்படுத்தலாம்.

**- தஞ்சை தனலட்சுமி**



# ஆட்கள் பற்றாக்குறையினால் உயிரை இழக்கும் மின்வாரிய ஊழியர்கள்!

தமிழக மின்வாரியத்தில் கடந்த பல ஆண்டுகளாக களப்பிரிவில் போதிய பணியாளர்கள் நியமிக்காத சூழலில் வடுதல் பணிச்சுமையோடு மின் ஊழியர்கள் தங்கள் இன்னுயிரை இழந்து வருகிறார்கள். 39,000-க்கும் மேற்பட்ட களப்பிரிவு ஊழியர்களின் பதவிகள் காலிப்பணி இடங்களாக உள்ளன. 22,874 களஉதவியாளர்களும், 8800 கம்பியாளர் பதவிகளும் காலியாக உள்ள நிலையில் 2,92 கோடி மின் இணைப்புகளை பராமரிப்பதிலும் மக்களுக்கு தடையில்லா மின்சாரத்தை வழங்குவதிலும் தங்களது களப்பணியை ஆற்றி வருகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த ஊழியர்கள் பணிக்கு அழைக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு களப்பிரிவு ஊழியர்களும், பிரிவு அலுவர்களும் தள்ளப்படுகின்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட மின் கம்பிகளும், தளவாட பொருட்களும் உறுதியான தாகவும் தரமானதாகவும் இருந்தது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக நமது கற்காரை கம்பங்கள் உற்பத்தி செய்யும் யார்டுகளை மூடுவிழா கண்டு தனியாரிடத்தில் அதுவும் வெளி மாநிலத்தில் சுயநலத்திற்காக வாங்குவதால் தரமற்றவைகளாக இருப்பதோடு விபத்துக்களையும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது.

தற்போது RMU என்று சொல்லுகின்ற புதிய பிரேக்கரை வாரிய நிர்வாகம் உயர்அழுத்த மின்பாதையில் பொருத்தியுள்ளது. துணை மின் நிலையத்திலிருந்து ரிமோர்ட் மூலம் இதை இயக்க வேண்டும் என திட்டமிட்டு அமைத்தார்கள். ஆனால் நடைமுறையில் இது மிகுந்த பொருட்செலவு மட்டுமே ஏற்படுத்தியது. இதன் மூலம் தான் தற்பொழுது விபத்துகள் அதிகரித்து வருகின்றன.

மின்பாதைகளில் பழுது ஏற்பட்டாலோ அல்லது துணை மின் நிலையங்களில் மின் நிறுத்த காலத்தில் பணிகளை மேற்பார்வையிடுவதற்கும், பணிகள் செய்பவர்களின் பணியை கண்காணிப்பதற்கும் பணியாளர்கள், அதிகாரிகள் இல்லை.

விநியோகப்பிரிவு, துணை மின் நிலைய யார்டில் உள்ள காற்றுதிறப்பான்கள் ( A.B.Switch) மற்றும் அதை இணைக்கும் கேபிள்கள் ( Flexible Cable) ஆகியவை தற்போது வழங்குவது தரமற்றதாக இருப்பதால் விபத்துக்கள் அதிகமாக இதில் ஏற்படுகிறது. பெரும்பாலான விபத்துக்கள் காற்று திறப்பானில் உள்ள கத்திகள் முறையாக விலகாத காரணத்தால் ஏற்படுகிறது. அதே போல துணை மின் நிலையத்திலுள்ள பிரேக்கர்கள் கடந்த காலங்களில் சிறப்பு பராமரிப்பு, மற்றும் எம்.ஆர்.டி. MRT Wing -ல் பராமரிக்கப்பட்டது. ஆனால் ஆட்கள் பற்றாக்குறையின் காரணமாக பழுது ஏற்பட்டால் மட்டுமே சரிசெய்ய செல்வது என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

துணை மின் நிலையங்களில் முறைப்பணியில் ஒருவர் மட்டுமே இருக்கும் சூழலில் அவரும் Braker -க்கு அடுத்து காற்று திறப்பாணை திறக்காமல் இருப்பதும் விபத்துக்கான காரணம்.

திருப்பத்தூரில் உதவிப்பொறியாளர் உடனிருந்து பணி செய்ய சொல்கிறார். ஏற்கனவே உள்ள உயரமுத்த மின்பாதையில் ஒரு கம்பத்தில் 4

நாட்களுக்கு முன் வேறு ஒரு உயரழுத்த மின்பாதையிலும் கூட Back Feeding Supply கொடுக்கப்பட்டுள்ளது. Tapping Open செய்தவுடன் நமது தொழிலாளியும் வேகமாக பணி செய்ய மேலே ஏறுகிறார். விளைவு உதவிப் பொறியாளர் கண் முன்னே கம்பத்திலிருந்து கீழே விழுகிறார். பாதுகாப்பு விதிகள் கடைபிடிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட ஊழியர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் இருக்கிறார்.

காஞ்சிபுரத்தில் ஒயிட்கேட் பிரிவில், கடந்த 5-ந்தேதி அதிகாலை 1 மணியளவில் HT மின்பாதையில் Break down Incoming Line கட்டாகி கம்பத்தில் உள்ளது. Out going line கட்டாகி தண்ணீரில் கிடக்கிறது. உதவிப்பொறியாளர் சப்ளை நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே கம்பியை இணைப்புக் கொடுங்கள் திரு. பாக்யநாதனுக்கு சொல்கிறார். அவரும் ஒப்பந்த ஊழியரை அழைத்து சென்று துண்டான கம்பியை தொடுகிறார் விளைவு இருவரும் அதே இடத்தில் மரணமடைந்தனர்.

திருப்பூரில் ஒரு பிரிவு அலுவலகத்தில் ஒரே ஒரு மின்பாதை ஆய்வாளர் உள்ளார். அன்று அவர் விடுப்பு எடுத்துள்ளார். அவருடன் எப்பொழுதும் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர் மின்மாற்றியை Open செய்கிறார். காற்றுத்திறப்பானில் ஒரு கத்தி கவனிக்காமல் மேலே ஏறுகிறார். விலகவில்லை விளைவு அதே இடத்தில் மரணம்.

விபத்து என்பது எதிர்பாராத ஒன்று தான் ஆனால் கூடுதல் பணிச்சுமையில் இரவு பகல் பாரமல் பணிபுரிகின்ற போது மனஅழுத்தத்தால் பணியாளரின் மனநிலையும் பாதிப்பு ஏற்படும் விரத்தியின் மனச்சோர்வில் விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது.

மின்வாரிய நிர்வாகம் ஒப்பந்த தொழிலாளி இறந்தால் ரூ. 5 லட்சம் வழங்குவதோடு தனத கடமையை நிறைவு செய்து வருகிறது. நிரந்தர ஊழியர்களுக்கு மின்வாரியத்திலிருந்து வழங்க வேண்டிய தொகையை வழங்கி வாய்ப்பிருந்தால் கருணை அடிப்படையில் வாரிசு வேலை வழங்கி விடுகிறது. இதற்கும் தொழிற்சங்கம் போராட வேண்டியுள்ளது. அதனால் இறந்துபோன தொழிலாளிக்கு அவரது உயிரை திருப்பித்தர முடியாது. அவரது குடும்பத்திற்கு வாரிய நிர்வாகம் எந்த நியாயத்தையும் வழங்க முடியாது.

எனவே, தமிழக அரசும், வாரியமும் இது ஒரு அத்யாவசிய துறை என்ற முறையில் தொழிற்சங்கத்துடன் ஏற்படுத்திய முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் களப்பிரிவில் உள்ள காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்புவதே நிரந்தர தீர்வாக இருக்கும்.



## திருச்சி மாநகர் கிளையில் மத்திய அமைப்பின் 50 ஆம் ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி

மத்திய அமைப்பின் பொன்விழா ஆண்டு கல்வெட்டு மற்றும் செங்கொடி ஏற்றும் நிகழ்ச்சி மறைந்த தோழர் பி. கணபதி நினைவாக, 14.11.2020 தோழர் ஜி. மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது கிளை செயலாளர் தோழர் எஸ்.கே. செல்வராஜ் கொடியேற்றினார், மாநில செயலாளர் எஸ். ரெங்கராஜன் கல்வெட்டு திறந்து வைத்தார், வட்ட பொருளாளர் எம். இருதயராஜ் மற்றும் திட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மின்வாரிய ஊழியர்களுக்கு 2021 ஆம் ஆண்டிற்கான விடுமுறை நாட்கள் அறிவித்த வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**(ABSTRACT)**

TANGEDCO–Holidays for the employees of TANGEDCO, TANTRANSCO and TNEB Limited for the Calendar year 2021 – Orders – Issued.

**(SECRETARIAT BRANCH)**

**(Per) CMD TANGEDCO Proceedings No.192, dated:02.12.2020**

Sarvari varudam
Karthigai 17.
Thiruvalluvar Aandu 2051.

Read:-

G.O.Ms.No.554, Public (Miscellaneous)Department, dated 27.10.2020.

**PROCEEDINGS:**

In accordance with the orders read above, the TANGEDCO directs that the employees of the TANGEDCO, TANTRANSCO and TNEB Ltd on time scale of pay, be granted holidays during the year 2021 as detailed in the Annexure.

2. The number of holidays allowed will not be a precedent for future years. If any one of the occasions mentioned in the Annexure, for which a holiday is declared happens to fall on normal holiday like Sunday in the future year, no substitute holiday on that account will be allowed. Besides, the TANGEDCO, TANTRANSCO and TNEB Ltd shall also follow any other order that may be issued by the Government of Tamil Nadu, declaring holidays on special occasions and compensatory working days in lieu thereof, during the year 2021.

3. The monthly rated employees of the Corporation may also have holidays on Sundays or any other days in a week in lieu of Sundays.

4. The TANGEDCO further directs that in addition to the holidays mentioned in the Annexure Mahaveer Jayanthi on 25.04.2021 and Independence day on 15.08.2021 which falls on Sunday shall be the holidays for the shift operation staff for whom those Sundays are working days.

**(BY ORDER OF THE CHAIRMAN cum MANAGING DIRECTOR)**

**M.BHAVANI,**
**SECRETARY.**

## ANNEXURE

| SL.No | PUBLIC HOLIDAYS | DATE | DAY |
|---|---|---|---|
| 1. | New Year's Day | 01.01.2021 | Friday |
| 2. | Pongal | 14.01.2021 | Thursday |
| 3. | Thiruvalluvar Day | 15.01.2021 | Friday |
| 4. | Uzhavar Thirunal | 16.01.2021 | Saturday |
| 5. | Republic Day | 26.01.2021 | Tuesday |
| 6. | Good Friday | 02.04.2021 | Friday |
| 7. | Telugu New Year's Day | 13.04.2021 | Tuesday |
| 8. | Tamil New year's Day and Dr. B.R. Ambedkar's birthday | 14.04.2021 | Wednesday |
| 9. | Mahaveer Jayanthi | 25.04.2021 | Sunday |
| 10. | May Day | 01.05.2021 | Saturday |
| 11. | Ramzan (Idu'l Fitr) | 14.05.2021 | Friday |
| 12. | Bakrid | 21.07.2021 | Wednesday |
| 13. | Independence Day | 15.08.2021 | Sunday |
| 14. | Muharram | 20.08.2021 | Friday |
| 15. | Krishna Jayanthi | 30.08.2021 | Monday |
| 16. | Vinayakar Chathurthi | 10.09.2021 | Friday |
| 17. | Gandhi Jayanthi | 02.10.2021 | Saturday |
| 18. | Ayutha Pooja | 14.10.2021 | Thursday |
| 19. | Vijaya Dasami | 15.10.2021 | Friday |
| 20. | Milad-un-Nabi | 19.10.2021 | Tuesday |
| 21. | Deepavali | 04.11.2021 | Thursday |
| 22. | Christmas | 25.12.2021 | Saturday |

//TRUE COPY//

SECTION OFFICER.



மத்திய அமைப்பின் கரூர் கிளையில் 50 ஆம் ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி 20.11.2020 அன்று நடைபெற்றது. கிளைச் செயலாளர் தனபால் மற்றும் திட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்

# சண்டிகர் பிரதேசத்தில் உள்ள மின்வாரியம் பிரிக்கப்படுவதை எதிர்த்து தொழிற் சங்கம் தாக்கல் செய்த வழக்கில் பஞ்சாப் – அரியானா உயர்நீதிமன்றம் தடை உத்திரவு பிறப்பித்துள்ளது

**UT POWERMEN UNION, CHANDIGARH (REGD.)**
**VS**
**UNION OF INDIA AND OTHERS**

Present : Mr. Sunil Chadha, Sr. Advocate with
Mr. Akshay Chadha, Advocate
for the petitioner.
Mr. S.P.Jain, Addl. Solicitor General of India with
Ms. Neha Sharma,Advocate
for respondent No. 1.
Mr. Pankaj Jain, Sr. Standing counsel, U.T., Chandigarh with
Mr. Namit Kumar, Advocate
for respondent Nos.2
to 5-U.T., Chandigarh.

The matter has been taken up through video conferencing in the light of the pandemic Covid-19 situation and as per instructions.

States that there is no provision of privatization under the Electricity Act, 2003 (in short 'the Act'). No provision has been framed for reservation policy for the OBC, BC, sports personnel, ex-army personnel and various deprived sections of the society. The impugned action of the respondents in taking effective steps to privatize the Electricity Wing, U.T., Chandigarh/power utility in Chandigarh by selling of 100% stake of the Govt. is not legally sustainable, the same being violative of Section 131 (2) of the Act, as per which the power department/utility cannot be transferred to a totally private entity with no stake or control of the Government at all. The sale of 100% stake of the U.T. Administration in the Electricity Wing of U.T., Chandigarh which is running in profits and is revenue surplus for the past 3 years and is also economically efficient having T & D losses less than 15 % the target fixed by the Ministry of Power is unjust and illegal. The transfer scheme (Annexure P-11) has been prepared without calling for the objections of all the stakeholders i.e. Consumers and employees of the Electricity Wing as well as the heads/representatives of the three State Governments i.e. Punjab, Haryana and U.T. Chandigarh and thus cannot be legally sustained and acted upon.

Learned Senior counsel further contends that in the absence of finalizing and notifying transfer scheme under Section 131 of the Act, process of inviting bids vide the impugned notice dated 10.11.2020 (Annexure P-14) could not be initiated. The impugned action of the respondents in privatizing the Electricity Wing of U.T., Administration is

also violative of mandatory provisions of Sections 30, 31, 32, 39, 40 and 41 as well as provisions of Sections 16 and 17 of the Act.

Notice of motion.

At this stage, Mr. S.P. Jain, Addl. Solicitor General of India assisted by Ms. Neha Sharma, Advocate accepts notice on behalf of respondent No. 1. Mr. Pankaj Jain, Sr. Standing counsel, U.T., Chandigarh assisted by Mr. Namit Kumar, Advocate causes representation on behalf of respondent Nos.2 to 5.

Heard.

Considering the nature of the issue involved, we feel that the matter will require detailed deliberations as it touches the employment scheme of the society in general.

Admitted.

The operation and effect of the impugned Office Memorandum dated 10.06.2020 (Annexure P-3) and Notice Inviting Bids dated 10.11.2020 (Annexure P-14) shall remain stayed till further orders.

To be heard within six months after the resumption of normal functioning of the Court.

Parties are directed to complete the pleadings in the meantime.

In case, the matter is not taken up within the stipulated period, the parties shall be free to move an application for getting the matter fixed on an actual date.

| | |
|---|---|
| (JITENDRA CHAUHAN)<br>JUDGE | (VIVEK PURI)<br>JUDGE |



## திருவண்ணாமலையில் பொன்விழா ஆண்டு

மத்திய அமைப்பின் திருவண்ணாமலை மேற்கு கோட்டம் தானிப்பாடி துணை மின்நிலையம் மற்றும் பெருங்குளத்துார் பிரிவு அலுவலகம் முன்பாக 1.12.2020 அன்று நடைபெற்ற கல்வெட்டு திறப்பும், செங்கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. கோட்டத் தலைவர் தோழர் கே. மணி தலைமை தாங்கினார், செயலாளர் ஆ. குருதேவன் வரவேற்றார், மாநில செயலாளர் கே. காங்கேயன் செங்கொடி ஏற்றினார். மாநில செயலாளர் ஆர். சிவராஜ், கிளைப் பொருளாளர் வி.எம் வெங்கடேசன், மாநில செயற்குழு உறுப்பினர் ஆ. பெருமாள் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

நவம்பர் 26

# அகில இந்திய பொது வேலைநிறுத்தம்.
# மாநிலம் முழுவதும் மின் ஊழியர்கள் பிரச்சாரம் – விளக்கக்கூட்டம் – மறியல்












Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2018 - 2020
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2018 - 2020
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 21.11.2020.

நவம்பர் 26

## அகில இந்திய பொது வேலைநிறுத்தம்.
## மாநிலம் முழுவதும் மின் ஊழியர்கள் பிரச்சாரம் – விளக்கக்கூட்டம் – மறியல்

















Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian